ஜகன்மோகினி

108

2 JAN 1946

108

JL
N45. 22.12
183108

December 1945

4

திங்கள் 12

"JAGANMOHINI," SINGAPERUMALKOIL

க்ஷேமலாபங்கள்

பரிபூர்ண கடாக்ஷத்தி
ஸ்ரீ கீதாசாரியன், ந்ருஸிம்மன் இருவருடைய
னலும் பெரியோரின் ஆசிர்வாதத்தினலும் அன்பர்களின் பேராதரவினலும்
மோகினியின் 22-வதாண்டு இம்மாதத்துடன் முடிவடைந்து, அடுத்த மாதம்
மங்களகரமாய் 23-வதாண்டு ஆரம்பமாகிறது.

பொங்கல் புது மலரைப்பற்றி நாம் எதும் அதிகம் தெரிவிக்க
வேண்டாம். மலரை அலங்கரித்துள்ள பேரறிஞர்களின் ஜாபிதாவைப்
பார்த்தவுடனே அதுவே தனது சிறப்பை விளக்கிவிடும் என்பதில் ஐய
மில்லை. மூவர்ண அட்டைப் படம் ஒப்புயர்வற்ற அழகுடன் ப்ரகாசிப்ப
தொன்றே உங்களை பெருமகிழ்ச்சிக்குள்ளாக்கும். உள்ளே ஒளிரும்
இதரப் படங்களின் வசீகரமும் விஷய மேன்மையின் சிறப்பும் கண்டு
களித்து அனுபவித்தால் தெரியுமேயன்றி எழுதினல் போதாது. கண்ணுக்கு
ஆனந்தம், கரத்திற்கு பூஷணம். வீட்டுக்கலங்காரம். பொங்கல் பரிசு
வழங்குவதற்கும் உகந்தது. உடனே முந்துங்கள்.

ஏற்கெனவே பெரும்பாகம் மலர் பதிவாகிவிட்டது. இன்னும்
சொல்ப ப்ரதிகளே கைவசமிருப்பதால் யார் முன்னல் பதிவு செய்து
கொள்கிருர்களோ, அவர்களுக்குத்தான் கிடைக்கும். இதுவரையில் ஆதர
வளித்துள்ள எனையோருக்கும் வந்தனங்களைச் செலுத்துகின்றேன்.
மலருக்கு விஷயதானம் செய்துள்ளோர் அனைவருக்கும் எனது இதய
பூர்வமான வந்தனத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

23-வது ஆண்டில் மோகினி ப்ரதி பலன் என்கிற புதிய நாவலையும்,
பொங்கல் மலரையும்—மலரில் "வெளுத்த வானம்" நவீனத்தையும்—தாங்
கிக்கொண்டு ஆனந்தமாக பொங்கலன்று உங்களிடம் களியாட வருவாள்.

ப்ரதிபலனு! யாருக்கு யார் என்ன ப்ரதி பலனைக்கொடுக்கிருர்கள்.
ப்ரதி பலனைக் கோராமலேயே மழை தானகப் பொழி
வதுபோல் உதவி செய்வது ஒரு தினுசு.
ப்ரதி பலனைக் கோரியவர்
களுக்கும் சில

71-வது
ப்ரதிபலன்
நாவல்

சமயம் பலன்
கிடைப்பதில்லை. சிலருக்குக்
கிடைக்கிறது. இக்கதையில் எத்தகைய
ப்ரதிபலனை யார் எப்படி எப்போது அடைகிருர்கள்?
குழந்தை சத்யபாமா யார்? ஆம். அவளுடைய வாழ்க்கையின் வரலாற்றில்
ப்ரதிபலிக்கும் விஷயம் என்ன? என்பதைப் படித்து இன்புறுங்கள்.

இவ்விதழ் மேலட்டைப் படம்:

கணவன்:- சாந்தி! இதோ! நந்தவனம் ஒன்பதாவது மலரே உன் பிறந்த
நாள் பரிசு. இந்தா...

மனைவி:- வெகு சந்தோஷம். பொங்கல் பரிசாக மோகினிப் பொங்கல் மலரை
வாங்க மறந்துவிடாதீர்கள்.

9-வது நந்தவனம்—80 பக்கங்கள்—அணு 8.

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு -திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி

Vol. 22. No. 12. பார்த்திப : கார்த்திகை December 1945

ஒற்றுமைக் கண்ணி

ஒன்றே பரம் பொருளும்,
ஒன்றே உயிர்க் குலமும் :
ஒன்றே யிவ்வானுலகும் :
உண்மை யறிவீரே
காற்றுங் கதிருங்
கடலும் கரும்புயலும்
போற்றும் உலகம்
பொது வென்றறிவீரே !

வெள்ளை கறுப்பென்ற
வேற்றுமைகளில்லாமல்,
உள்ளன்பு கொண்டுமக்கள்
ஒற்றுமையாய் வாழ்வீரே

ஆயுதங்கள் காட்டி
அடிமைப் படுத்தாது,
நேயத்தி லோங்கி
நிலைபெற்று வாழ்வீரே !

சுத்தானந்த பாரதி

12 JAN 1946
MADRAS
183108.

ADVERTISERS, PLEASE NOTE.

We have pleasure in announcing the appointment of
The J. B. N. Publicities,
2/36 Luz Church Road
Mylapore, Madras.
as our sole publicity agents for Jaganmohini and other allied publications. Please book your space with them.

1—12—1945. *Advt Manager.*

7. நிறச் செருக்கு

"நாட்டுப்பெண் கறுப்பா சிகப்பா?" என்று சிலர் கேட்கிறார்கள். சிகப்பிற்குப் பெருமை அதிகம். கறுப்பாயிருந்தால் "ஐயோ! கண்ணை மூடிக்கொண்டுதான் பார்க்கவேண்டும்" என்று வெறுக்கிறார்கள். இந்த நிறப்பேய் உலகைப் பிடித்த மாயங்களில் ஒன்று. இந்தக் காலத்தில் கறுப்பு முகத்தில் சாயமடித்தால் வெளுப்பாகக் காட்டலாம். பகலில் கரி, இரவில் கனலாக மின்னும் திரை நட்சத்திரங்களுக்கும் ஏக விளம்பரம்! படத்தில் அரம்பை; பார்த்தால் அண்டங்காக்காய் என்றிருப்பவர் பலராவார். தோலுக்கடியில் எல்லோரும் ஒரே நிறந்தான்; எல்லார் இரத்தமும் செந்நிறமே; எல்லார் சதையும் ரோஜா நிறமே. மேல் தோலுக்கடியில் நிறத் தோல் உள்ளது. அதன் நிறம் பாம்புச் சட்டை போன்ற மேல்தோல் வழியே காட்டுகிறது. இதுதான் மனிதருக்குரிய இயற்கை நிறம். இந்த நிறம் குளிர் வெப்ப நிலைக்கேற்றபடி மாறும். வெளுப்பாயிருப்பவரெல்லாம் அழகு என்று சொல்லமுடியாது. சோகை பிடித்த வெள்ளை அழகன்று; செங்குரங்கு முகம் அழகன்று. கண்ணன் திரௌபதை முதலியோர் கறுப்புத்தான். அவர்கள் அழகில் இணையற்றவர்கள். நிறம் எப்படியிருந்தாலும், நல்ல மனசு, கண்ணில் நல்ல ஒளி, வசீகரமான புன்னகை, ஆரோக்யமான உடம்பிருந்தால் நகை நட்டுகளில்லாமலே அழகாயிருக்கலாம்.

அழகென்பது எழில், வனப்பு, வசீகரம். சிகப்பாயிருக்கும் சிலர் உதட்டில் இரத்தச் சாயமும், கன்னத்தில் ரோஜாச் சாயமும், புருவங்களிலும், கண்களிலும் மையும் தடவிக்கொண்டு, மின்சார விளக்கு முன்னே நின்றால் போலி மினுக்கு அருவருப்பைத் தருகிறது. அத்துடன் நவநாகரீக ஆடைகளும் கோணல்களும் சேர்ந்தால் "ஐயோ! இதென்ன கோலம்" என்று எண்ண வேண்டியிருக்கிறது. நிறம் கறுப்பானாலும் முகத்தில் மஞ்சளும் குங்குமமும், கற்பின் எழிலும், அடக்கமும், அகமகிழ்ந்த புன்னகையும் குலுங்கும் பத்தினிப் பெண்களைக் கண்டால் மஹாலக்ஷ்மிபோல் வணங்கத் தோன்றுகிறது. சிகப்பாயிருப்பவரெல்லாரும் ஆரோக்கியமாயிருப்பதாகச் சொல்லமுடியாது. கறுப்பாயிருப்பவர் பலர் நல்ல பலசாலிகளாகவும், உழைப்பாளிகளாகவும், பரோபகார சீலர்களாகவும் இருக்கிறார்கள். ஆள் அழகு, உயரம், வெள்ளை எல்லாம் சரிதான். அவன் ஒரு பெரிய குண்டைத் தூக்கி நம் மேல் எறிந்தால் அழகுதான்!—போதும்.

இந்த உலகில் வெள்ளை—கறுப்பு விவகாரத்தால் பல அட்டூழியங்களும் அனியாயங்களும் நடக்கின்றன. உலகில் சூரிய வெளிச்சத்திற்குத் தக்கபடியே தோல் நிறம் மாறும். பனி மண்டலத்திலிருப்பவர்கள் தந்தம் போல் வெளுப்பு; ஐரோப்பாவிலுள்ளவர்கள் சிவப்பு—வெளுப்பு. துருக்கியர் செந்நிறம், சீனர் மஞ்சள், ஆப்பிரிக்கர் கறுப்பு, இந்தியர் மாநிறம். இந்தியருள் நல்ல சிகப்பான பலரும் இருக்கிறார்கள். இந்த இயற்கை நிறங்களை யாரா

லும் மாற்றமுடியாது. நிறத்தைக் கொண்டு ஆளை மதிப்பதும் மடமை. நம் உடலிலேயே மயிர் கறுப்பு, கண் மணி கறுப்பு, கண் மணியை வெறுப்பாருண்டா?

உலகில் நிற மாயம் அசுரக் கொடுமை செய்கிறது. குளிர் நாட்டிலுள்ள வெள்ளைக்காரர் தாங்களே அறிவாளர், பலசாலிகள், தாங்களே உயர்வு, தாங்களே ஆளும் சாதியார் என்று மார் தட்டுகின்றனர். ஆசியா ஆப்பிரிக்கா நாட்டார் தம்மைவிட மட்டம் என்று நினைக்கிறார்கள். இந்த வெள்ளைச்செருக்கில் மண்ணாசையும், யந்திர தந்திர பலங்களும், கடைசியாக அணுகுண்டும் சேர்ந்தால் சொல்லவேண்டுமா?

"எமதே உலகம்! நாமே ஆண்டான்; பிறர் நம் அடிமைகள்" என்ற அகம்பாவம் 150 பாகைக்கேறிப் போய்விட்டது.

தன்னைப்போலப் பிறரை மதிக்க பைபிள் வேதம் முறையிடுகிறது. தன்னைத் தவிர மற்றவரை மிதிக்கவே அகம்பாவத் திமிர் கிளம்புகிறது. சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்று பேசும் நாடுகள் கூடப் பிற நாட்டார் மார்பில் பீரங்கியைக் காட்டிச் சுடுகின்றன. காரணம், இவர் வெள்ளை, அவர் கொஞ்சம் மாநிறம். எல்லாம் தோல்வர்ணம், மேல்வர்ணம்! எல்லா வுயிர்களுக்கும் ஆன்மாவான ஒன்று சாதி நிற மத பேதமற்றது...உஷ். வேதாந்தம் யாருக்கு வேண்டும்?...வயிற்றை முதலிற் பார்ப்போம்.

ஆம். நிறத்திமிரின் குறிப்பு தன் வயிறுதான். தான் நிரம்பச் சம்பாதிக்கவேண்டும். நன்றாகச் சாப்பிட வேண்டும்; பலசாலியாகி இரும்புக் கரத்தால் பிறரை அடக்கியாள வேண்டும் என்பதே நிறத் திமிரின் கொள்கை. "வளர் பலம்; சோ படை; போடு சண்டை; வெல் உலகை; அபாயமாயிரு: அதி மனிதனாயிரு" என்று நீட்சே ஒரு புதிய பலாத்கார பைபிளை எழுதி வைத்து விட்டான். நீட்சே போட்ட குண்டு தான்; இன்று V 2, ஆடம் பாம் முதலிய அபாய வெடிகளாகக் கிளம்புகின்றன. இந்த நிறத் திமிரால் ஆப்பிரிக்காவும் ஆசியாவும் எமகண்டத்திலிருக்கின்றன.

உலக சரித்திரத்தைப் பார்த்தால் கறுப்பு மனிதர் எனப்படுவோர், யானைபோல், செக்குமாடு போல் பாடுபடுகிறார்கள். உலகம் செழித்தது அவர்களாலேதான். தென்னாப்பிரிக்காவிலும் பிஜியிலும் அமெரிக்காவிலும் கோடிக்கணக்கான கறுப்பர் இரத்தப் பாடுபட்டு உவர் நிலத்தைப் பயிர் நிலமாக்குகிறார்கள். காட்டைத் திருத்திநாடாக்குகிறார்கள். கரும்பும், வாழையும், நெல்லும், கோதுமையும், கனி கிழங்குகளும் அவர்களே விளைவிக்கிறார்கள். சமுத்திரத்தில் முத்துக் குளிப்பவர்கள் அவர்கள். பொன், வெள்ளி, செப்பு, தகரம், ஈயம், நிலக்கரிச் சுரங்கங்களில் 8000 அடி ஆழத்தில் உயிரைக் கொடுத்து வேலை செய்பவர் இவர்களே. இவர்கள் எடுத்து மேலே கொண்டு வரும் தங்கக் கட்டிகளையே உருக்கி வெண்துரைகள் செல்வங் குவிக்கிறார்கள். இவர்கள் உழைப்பே அவர்கள் செழிப்பு. உதாரணமாக நெத்தால் தோட்டம், ஜோஹான்ஸ்பர்க்கு வைரச்சுரங்கம், பிஜி கரும்புத் தோட்டம், அமெரிக்கா முழுதும் விவசாயவேலைகளில் ஈடுபட்டவர் பெரும்பாலும் ஆசிய ஆப்பிரிக்க மக்களே.

மலேயா ரப்பர்த் தோட்டம், ஈயச்சுரங்கம் இவற்றில் பாடுபடும் கூலிகள் இந்தியரே. போர்முனை

களிலெல்லாம், பீரங்கி வாயில் பாயும் தீரர் இந்தக்கறுப்பு மனிதரே. வெள்ளை யாட்சியின் நரம்புகள் இவர்களே. இவர்களைக் கட்டுப் படுத்தி வேலைவாங்கிய ஐரோப்பியர் உலகை வளைக்கிறார்கள். கப்பல் களிலும், தொழிற்சாலைகளிலும் கடுமையான தேகப்பிரயாசைப்படுவோர் இவர்களே.

இவ்வளவு செய்துமென்ன? நன்றியுண்டா? மதிப்புண்டா? சித்திரை வெய்யிலில் பொதி சுமக்கும் கழுதையிடம் வண்ணானுக்கு மதிப்புண்டா? செக்குமாட்டிடம் வாணியனுக்கு என்ன மதிப்பு? அதே மதிப்புத்தான் கறுப்புக் கூலிகளிடம் வெள்ளை எசமான்களுக்கும். ஆப்பரிக்க ஆசிய மக்களை அடிமை வேலைக்கு வாங்குவதே நீண்டகாலம் ஒரு வியாபாரமாயிருந்தது. இந்த அடிமை வியாபாரத்தை ஒழிக்க ஆபிரஹாம்லிங்கன் வெகு பாடுபட்டான்; அதற்காகக் கொடும்போர் நடந்தது. அடிமை விலக்குச்சட்டம் சிறிது தளர்ந்தது என்றாலும், இன்னும் "வெள்ளை உயர்வு; கறுப்பு தாழ்வு; அது ஆண்டான்; இது அடிமை" என்ற திமிர் வட்டி போட்டு வளர்ந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவில் புக்கர் வாஷிங்டன் என்ற நீக்ரோ வீரன் எழுந்தான். ப இடர்களைப் பொறுத்து நல்ல கல்வி கற்றான். துசுக்கியில் நீக்ரோஜாதியார் முன்னேற்றத்திற்கென்றே சர்வகலாசாலை நிறுவி அற்புதமான பணி செய்தான். "வெள்ளையரே மனிதர்; மற்றவர் அடிமைநாய்கள்" என்று நினைக்கும் அகம்பாவத்தை விடுங்கள்; கறுப்பு மனிதர்தோல் கறுப்பானாலென்ன? வெள்ளையருக்குள்ள அறிவும் ஆற்றலும் இவர்களுக்கும் உண்டு" என்று விளக்கினான் புக்கர்வாஷிங்டன். அவனுக்குப் பிறகு நீக்ரோவர் கொஞ்சம் உரிமை பெற்றிருக்கிறார்கள். ஆனால் இன்னும் வெள்ளை ஓட்டல்களில் கறுப்பனுக்கு கல்தாதான்.

இந்த வெள்ளை–கறுப்புவிவகாரம் இன்றும் ஆப்பிரிக்காவில் தொல்லை செய்துகொண்டிருக்கிறது. ஆசிய மக்களையும், ஆப்பரிக்கரையும் வெள்ளை நிறத்தார் எப்படி வெறுக்கிறார்கள் என்பதை ஆப்பரிக்கா படம் பிடித்துக் காட்டுகிறது.

தென்னாப்ரிக்காவைக் காண்போம்; அது வெள்ளையர் நாடன்று. அஃது ஆப்பரிக்கர்தேசம். முற்காலம் ஆப்பரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் நெருங்கிய தொடர்பிருந்தது. இந்தியத் துணியும், இரும்பும், மிளகும் வாசனைச்சரக்கும் அங்கே விற்றன. இந்தியாவே கார்த்தாக வீரருக்கு வாள் செய்து கொடுத்தது. இந்திய வியாபாரிகள்—முதன்மையாகத் தமிழ் வணிகர்—பலர் ஆப்பரிக்காவில் குடியேறித் தொழில் நடத்தினர். அபிசீனியா, எகிப்து, அல்ஜீரியா, நெத்தால் முதலிய பிறதேசங்களில் பெருவாரியான இந்தியர், சொந்த நாடு போலச் சுதந்தரமாக வசித்து, சுதேசிகளுடன் ஐக்கியமானார்கள். அந்த நாடுகளில் உள்ள ஊர்களின் பெயர்கள்கூட இந்தியப் பெயர்கள் போன்றவை.

ஆசியாவுக்கும் ஆப்பரிகாவுக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

இந்தியரின் சுதந்தரம் பறிபோனது. இந்தியத் துறைகளை வெள்ளைக் கப்பல்கள் பற்றிக் கொண்டன. நமது நாடு அடிமை நாடானது. நாடு பகற் கொள்ளை போனது. பஞ்சம் பகாசுரன்போல் ஆட்களை அடித்து விழுங்கியது. ஏழை இந்தியர் பசிக்கொடுமையால் வருந்தினர். இவர்களை ஆசை காட்

டிக் கங்காணிகள் கப்பலேற்றினர். ஏழை மக்களை இக் கங்காணிகள் வஞ்சித்துக்கொண்டு சென்ற கதை பரிதாபமானது. ஏழை இந்தியர் நெத்தாலுக்கும் பிஜிக்கும் மலே யாவுக்கும் சென்றனர். அங்கே வயல், தோட்டம், சுரங்கங்களில் நாளெல்லாம் பாடுபட்டனர். 1843-ம் ஆண்டிலிருந்து இவ்வாறு ஏழை இந்தியர் ஒப்பந்தக் கூலிக ளாகச் சென்றனர். அது விக்டோ ரியா ராணி காலம். "நாடு, நிறம், பிறப்பு, வகுப்பு, மொழி வேறு பாடில்லை; எல்லோரும் சமம்; நல்ல கூலி; சுக ஜீவனம்" என்றெல்லாம் ஆசை காட்டினர் கூலிக் கங் காணிகள். இந்தியாவின் உயிர்நாடி களான பாட்டாளிகள் ஒப்பந்தக் கூலிகளாகக் கப்பலேறினர். பரிதா பம்! அவருட் பெரும்பாலோர் தமி ழரே. இவர்கள் உழைப்பால் தென் னாப்பரிக்கா பொன்னும் பச்சையும் குலுங்கியது. இவர்களால் ஐரோப் பியர் பெரிய முதலாளிகளானார்கள்.

ஆனால் ஐரோப்பியரைவிட இந்தி யர் சிக்கனமாக வாழ்ந்தனர். இந் திய வியாபாரிகள் சிறுகக் கட்டிப் பெருகவாழ்ந்து, பாடுபட்டுப் பணம் சேர்த்து வீடு வாசல் கட்டி வாழத் தொடங்கினர். நாளடைவில் இவர்கள் தென்னாப்பிரிக்காவையே சொந்த நிலமாகப் பாராட்டத் தொடங்கினர். சுதேசிகளுடன் இவர்கள் வாழ்வும் ஐக்கியமானது.

இது ஐரோப்பிய முதலாளிகளுக் குப் பொறுக்கவில்லை. 'ஆசியர் என் றும் எங்கள் அடிமைகளாகவே யிருக்கவேண்டும். நிலபுலன் வாங் கக்கூடாது.......அவர்களை அடக்கியாளவேண்டும்" என்று வெள்ளையர் கிளம்பினர். அநீதிச் சட்டங்களும் அக்கிரம வரி களும் புறப்பட்டன! ஆசியச்சட்டம் என்ற பேய் கிளம்பி, நம்மவர் தலை தூக்க வழியில்லாமற் செய்தது. இந்தியக் கூலிகளுக்குச் சவுக்கடி யும் வரிச்சுமையும், அரைவயிற்றுக் கஞ்சியுமே உரிமை; மற்ற உரிமை பெருமைகளெல்லாம் வெள்ளைக் காரருக்கே ஏகபோகம்; கூலியில் பெரும்பாகம் வரி வம்புகளுக்குப் போய்விடும்; தலைவரி வேறு: இந் தியர் ஊர்க்கோடியில் குறித்த இடத் திலேயே வசிக்கலாம்; ஐரோப்பிய ஓட்டல்களில் நுழையக் கூடாது; வண்டிகளில் வெள்ளையருடன் சம மாக உட்காரக் கூடாது. இன்னும் எத்தனையோ எமகண்டச் சட்டங்க ளுண்டு. சட்டத்தை மீறினால் சவுக் கடி, சிறை! தரும தேவதைக்குப் பொறுக்கவில்லை; அவளே மஹாத்மா காந்தியை அங்கே அனுப்பினாள். இந்தியக் கூலிகள் பட்ட சிறுமை களை பாரிஸ்டர் காந்தியும் பட்டார். அவர் மனச்சாட்சி கொதித்தது; சத் தியாக்கிரகப்போர் புரிந்தார்; தமிழ்க் கூலிகள் அவருக்கு வலதுகைபோல் உதவினர். துப்பாக்கி முனையிலும் சாத்விக எதிர்ப்பு நடந்தது.

உலகமெல்லாம் மஹாத்மாவின் செயலைப் போற்றியது. ஆங்கில அரசாங்கம் கூட அவரை மெச்சித் தூதனுப்பியது. முடிவில் தென்னாப் பரிக்கத் தலைவரான ஸ்மட்ஸ்துரைக் கும் காந்திஜிக்கும் ஒப்பந்தம் நடந் தது; ஆசியச் சட்டத்தின் விஷம் சிறிது இறங்கியது. மஹாத்மா இந்தி யாவுக்கு வந்த பிறகு மீண்டும் ஆசி யச் சட்டம் படமெடுத்துச் சீறியது.

1926-ம் ஆண்டு தென்னாப்பரிக் காவிலிருந்து இரண்டு நண்பர் வந் தனர். அப்போது நான் தஞ்சாவூரில் சமரஸ போதினி நடத்தினேன். அவர்களுடன் நான் நீண்டநேரம் பேசி உண்மை யறிந்தேன். "கோகலே, சரோஜினி, ஆண்ட்

ருஸ். அப்துல்ரஹிமான் முதலிய பல தூதர் வந்தனர். மகாத்மா சத்தியாக்கிரகம் நடத்தினார். ஆனால் நிலைமை பழைய கறுப்பனாகவே யிருக்கிறது. நம்மிடம் வேலை வாங்கி நாடு செழித்த பிறகு இப்போது ஆசிய மக்களை வேரறுக்கச் சட்டம் செய்கிறார்கள். இழி தொழில் அடிமைகளாயிருக்கவேண்டும்; இன்றேல் வெளியேறவேண்டும்—இரண்டே எங்கள் கதி" என்று நண்பர் கண்ணீர் விட்டனர்.

இலட்சம் லட்சமாக இந்தியர் பணத்தைச் செலவிட்டு எத்தனையோ தூதுகள் நடந்தன. எல்லாம் கேலிக்கூத்தாயின. இன்னும் நிலைமை பழைய கறுப்பனைவிட மோசமாகத்தானிருக்கிறது. இரண்டு லட்சம் இந்தியர் அங்கே தவிக்கின்றனர்.

இந்தப்போரின் பயனாக ஆப்பிரிக்கா பிரிடிஷாரின் செல்வாக்கிலிருக்கிறது. பிரஞ்சுக்காரர்களுக்கும் அக்கண்டத்தில் ஆதிக்கம் அதிகம். "சுதந்தரம் என்றால் சுடு" என்கிறது நிறத்திமிர். அல்ஜீரியா சுதந்தரம் கேட்டது. பிரான்ஸு—குடியரசு பிரான்ஸு—பீரங்கியைக் காட்டியது. ஸிரியா உரிமை கேட்டது; சண்டையின்போது தந்த உரிமையும் பறித்துக்கொண்டு, பிரஞ்சு பீரங்கி ஸிரியரைச் சுட்டது. சிரியர் பட்டபாடுதான் ஆசியரும் படுகிறார்கள். வெள்ளைக்காரருக்குச் சரிசமானமாகப் போர் தொடுத்த ஜப்பானும் ஒடுங்கியது.

ஆனால் ஆசியா இன்று எரிமலையாயிருக்கிறது. சயாம், (தாய்லாந்து) ஜாவா எங்கும் உரிமைப்போர் நடக்கிறது. ஆயுதமில்லா இந்தியா மனோதைரியத்தால் உரிமை கேட்கிறது. ஆசியா முழுதும் கொதித்துக்கொண்டிருக்கிறது. போரில் வெந்து நொந்த சீனத்திலும் பொதுவுடமைக்கும் கோமிங்டான் கட்சிக்கும் போர் நடக்கிறது. "ஆசியாவை விட்டுப் போ போ" என்ற பல்லவிதான் எங்கும். ஆசியா விழித்துக் கொண்டது. இனி அது பிறருக்கு அடிமையாகாது. சண்டையடங்கிய பிறகு ஆங்கில—பிரஞ்சு பீரங்கிகள் ஆசியாவை அடக்க முனைந்துள்ளன. அணுவெடியே விழுந்து ஆசியாவே அழிந்தாலும் ஆசியரின் சுதந்தரக் கனல் அழியாது. இன்னொரு வடிவில் எழுந்து அது தன்னுரிமையை நாட்டியே தீரும். ஜாவாவில் டாக்டர் சுகர்ணா சொன்னதுபோல் "இந்தோனேசியா இந்தோனேசியருக்கே உரிமை; ஆசியா ஆசியருக்கே உரிமை; எங்கள் காரியத்தை நாங்களே கவனித்துக் கொள்வோம், அடிமைவாடை இங்கே கூடாது!" நிறத்திமிருக்கு இன்று ஆசியா நல்ல பாடம் கற்பிக்கிறது. 'நான் வெள்ளை; நீ கறுப்பு. நான் எசமான் நீ அடிமை' என்ற அகம்பாவம் ஒழித்து "நாமெல்லாம் பூமாதேவியின் சரிநிகரான மக்கள்; அவரவர் நாட்டை அவரவர் நிர்வகிப்போம். உரு நிறம் பல; ஆனால் எல்லாருக்கும் ஆன்மா ஒன்று. மனிதத் தன்மையும் உரிமையும் பொது" என்னும் உணர்ச்சி வந்தாலே உலகில் அடிமைத்தனமும், சுயேச்சாதிகாரக் கொடுமையும் ஒழியும்.

உலக சமுதாயத்தில் நிறத்திமிர் செய்யும் அநீதி ஒழியவேண்டும். ஒரு விட்டில் சிகப்பு நாட்டுப்பெண் அதிகாரம் செய்வது, கறுப்பு நாட்டுப்பெண் மாடுபோல் உழைப்பது என்றிருக்கக்கூடாது. இருவரும் வீட்டுக்காகப் பாடுபட்டாலே குடித்தனம் நடக்கும். அவ்வாறே உலகக் குடித்தனமும் ஒற்றுமையால் முன்னேறும்.

பி.ஸ்ரீ

காந்தீயம்—ஹிந்து தர்மத்தின் கனி

"ஹிந்துமதம் எனக்கு அபயம் அளித்திராவிட்டால், நான் தற்கொலை புரிந்துகொண்டிருப்பேன். ஹிந்து மதத்திலிருந்தே புத்தமதம் பிறந்தது. இன்று நாம் காண்பது தூய ஹிந்து மதம் அன்று, ஹிந்துமதத்தின் உருக்குலைந்த கேலிக்கூத்தேயாகும்" என்று மகாத்மா காந்தி சொல்லியிருக்கிறார். "ஆத்ம சக்தியே பெரிது; உலக சக்திகளுக்குப்பணிய வேண்டிய அவசியம் இல்லை, பயப்படவேண்டிய அவசியமுமில்லை" என்று ஹிந்துமதம் போதிக்கிறது. வேதகாலம் தொட்டு நாளதுவரை எத்தனையோ மஹான்கள்,—ஆண்களும் பெண்களும்—ஹிந்துமதத்தின் உண்மைத் தத்துவங்களுக்குச் சான்று தருகிறார்கள்; சத்தியத்தையும் அஹிம்ஸையையும் போற்றித் தொண்டாற்றி வந்திருக்கிறார்கள். இவர்களுடைய பெயர்கள் பொன்... எழுத்துக்களால் பொறித்தனபோல இந்திய சரித்திரத்திலும் இந்துமக்களின் உள்ளத்திலும் ஜொலிக்கின்றன. இவர்களில் காலத்திற்கேற்ற தேசத்தொண்டும் உலகத் தொண்டும் செய்துவரும் மகாத்மா காந்திக்கு ஒரு முக்கியமான ஸ்தானம் உண்டு.

உலகப் பணியே பரம புருஷார்த்தம்

வேதரிஷிகளும், ஆழ்வார் ஆசாரியர்களும் நாயன்மார்களும், வேறு பக்தமணிகளும் இன்று நமது உலகத்தைப் பார்க்க வந்தால், காந்தியடிகள் அடைந்திருக்கும் உணர்ச்சிகளையே பெரும்பாலும் அடைவார்கள், உலகநிலையைக் குறித்தும் நாட்டுநிலையைக் குறித்தும். இன்று நமக்காகவும் உலகத்திற்காகவும் மகாத்மா காந்தி எந்த மகத்தான தியாகத்தைச் செய்து வருகிறாரோ, அதே தியாகத்தை அவர்களும் செய்யப் பின்வாங்கமாட்டார்கள் என்று என் உள்ளம்சொல்லுகிறது.

முனிவர்களைப்போல், மற்றவர்களுக்கு உழைப்பதுதான் இவருக்கும் புருஷார்த்தம்; மற்றவர்களின் மகிழ்ச்சிதான் இவருக்கும்மகிழ்ச்சி. குணமென்னும் குன்றேறி நின்ற திருவள்ளுவரைப்போல் இவரும் உலகப் பிரஜையாக வாழ்ந்து காலத்துக்கேற்ற பணிசெய்து வருகிறார். புத்தர் பெருமானைப்போல் எதிரிகளையும் மனப்பூர்வமாக நேசிக்கிறார். ஆழ்வார்களின் தெய்விக அன்புடன் தேச மாதாவுக்குப் பணி செய்கிறார். மகாத்மாவின் மகாவீரம் நமது ஞானிகளும் யோகிகளும் பக்தர்களும் ஒருங்கேபோற்றிய ஆத்ம வீரந்தான். உலகமெல்லாம் சத்தியத்துக்கு விரோதமாகத் திரண்டு ஒருமுகப்பட்டு வந்தாலும் காந்தியடிகள் உண்மையின் கட்சியிலேயே நின்று, சித்திரவதைக்கும் சந்தோஷமாக உள்ளாவார் என்பதற்கு ஐயமில்லை.

உண்மையான ஹிந்து

இப்படிப்பட்ட மகாபுருஷனுடைய குணாதிசயத்தின் சாராம்சம் பக்தி-உணர்ச்சிதான். பன்னிரண்டு நாமங்களையாவது வேறு சமயக் குறிகளையும் அணிந்துகொள்ளவில்லை. எனினும் உண்மையான வைஷ்ணவர். கோவிலுக்குப்போய் கும்பிடுவதில்லை; சடங்குகளில்

பொழுதைக் கழிப்பதில்லை. எனினும் உண்மையான ஹிந்து.

கடவுள் தமக்குப் பல சந்தர்ப்பங்களிலும் வழிகாட்டுவதாகவே நம்புகிறார். அந்த வழியைப் பின்பற்றுவதில் சிறிதும் தயங்கமாட்டார். எவ்வளவு வேண்டிக்கொண்டாலும் ஒதுங்கி நிற்கமாட்டார். எவ்வளவு பயமுறுத்தினாலும் பின்வாங்கமாட்டார். இப்படிப்பட்டவர்களையே மகரிஷிகளென்றும், மகாத்மாக்களென்றும், அவதார புருஷர்களென்றும் நமது நாடு போற்றிவந்திருக்கிறது. சாரமான ஹிந்துமதக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கும் இவர் வாழ்க்கையின் ஒளி உலகமெங்கும் வீசுகிறது.

உலகத் தலைவர்

இப் பெரியார் இந்தியாவில் பிறந்திருந்தாலும் நமது தேசத்துக்கு மட்டும் உரியவரல்லர், உலகத்துக்கெல்லாம் சொந்தமானவர். இப்படிப்பட்ட மஹானை உலகத்துக்கு அளித்திருப்பது ஹிந்துமதத்திற்கும் இந்தியாவிற்கும் ஒருங்கே கிடைத்திருக்கும் பெருமை. பிரசித்திபெற்ற கிறிஸ்தவப் பாதிரிமார் முதலான மத சிரேஷ்டர்களும் இவரைக் கொண்டாடுகிறார்கள்.

பிறப்புரிமை இழந்த மக்களின் துயரங்களெல்லாம் மகாத்மாவின் குரலிலே வடிவம் பெற்று வருகின்றன. தியாகமாகிய பலிபீடத்தில் தம்மையே வேள்வி செய்த பெருமக்களில் மகாத்மாவே இன்று உலகத் தலைமைபெற்று விளங்குகிறார்.

ஏழைகளும் தாழ்ந்தவர்களும்

சத்திய சோதனையும் அஹிம்ஸா தர்மமுமே இவரை அரசியல் இயக்கத்திலும் செலுத்திவருகின்றன. அன்னியர்கள் நாட்டிலே புகுந்து நகர மாந்தரின் உதவிபெற்று, ஏழு லக்ஷம் கிராமங்களிலுள்ள ஏழை இந்தியர்களை நசுக்கி வருகிறார்களென்பதை மஹாத்மா கண்டுகொண்டார். ஏழை இந்தியாவே உண்மை இந்தியா. ஆதலால், ஏழைகளுக்கு அஹிம்ஸா தர்ம நெறியில் பணிபுரிவதையே இவர் நோன்பாகக்கொண்டிருக்கிறார். ஏழைகளைத் 'தரித்திர நாராயண'னைக் கண்டு பணி செய்கிறார்.

இதனால்தான் தீண்டாமை விலக்கிலே இவர் கண்ணும் கருத்துமாயிருக்கிறார். தீண்டாதவர்களை ராமானுஜர் திருக்குலத்தார் என்று அழைத்ததுபோல், மஹாத்மா காந்தி 'ஹரிஜனங்கள்' என்று அழைத்துப் பணிசெய்கிறார். சுமார் 900 வருஷங்களுக்கு முன் தமிழ்நாட்டில் தோன்றிய ராமானுஜருக்கும் காந்தியடிகளுக்கும் பொதுவான அருங்குணம் இது. இந்த அருங்குணத்தினால், மனித குலத்தின் கொழுந்தாக இருவரும் மதிக்கப்படுகிறார்கள்.

பெண்கள் விஷயத்தில் சமூகம் இழைத்திருக்கும் அநீதிகளையும் காந்தியடிகள் கண்டிக்கிறார். "பெண்களின் உரிமை விஷயத்தில் நான் சிறிதும் விட்டுக்கொடுக்க இயலாது' என்று தெளிவாகக் கூறியுள்ளார். மாதர்களை அடிமைப்படுத்தி வைப்பது அஹிம்ஸைத் தத்துவத்திற்கு முரண்பாடு என்பது காந்தியடிகளின் அபிப்பிராயம்.

காந்தியடிகளின் கொள்கைக்குத் தோல்வி என்பதே கிடையாது. ஹிந்து மதத்தின் இரண்டு மூச்சுப் பைகள் என்று கருதத்தக்க சத்தியத்தையும் அஹிம்ஸையையும் அடிப்படையாகக் கொண்ட காந்தீயம் வாழ்வின் பல துறைகளையும் தழுவியது. புத்தர் பெருமானும், கிறிஸ்து பெருமானும்கூட அரசியல் வாழ்விலே

காப்டன். என் சேஷாத்ரிநாதன் M. B., B. S. D T M.

வாழ்வதற்கே உயிர்

"பிறப்பில்லாமலிருக்கவேண்டும். பூர்வஜன்ம பாபங்களினால் இவ்வுலகில் பிறக்கிறோம். உலக வாழ்வை சீக்கிரமாகவே கழித்து, முக்தி அடைந்து, மீண்டும் பிறப்பில்லாமலிருக்கவேண்டும். கடவுளால் நேசிக்கப்பட்டவர்கள் யௌவனத்திலேயே மாண்டு முக்தியடைகிறார்கள்" இப்படி எல்லாம் பலர் கூறுவதை நாம் சாதாரணமாய்க் கேட்கிறோம். இவர்கள் உலகத்தை ஒரு சிறைச்சாலையாகக் கருதுகிறார்கள். இவர்களுடைய கொள்கைப்படி சுகம் என்பது இவ்வுலகில் இல்லை; சுவர்க்கலோகம் ஒன்று உண்டு, அங்குதான் துயரமில்லாச் சுகம் உண்டு; அதையே மனிதன் தேடவேண்டும்; இகலோக வாழ்க்கையை அநித்தியமாக நினைத்து, வாழ் நாட்களைச் சீக்கிரமாகவே கழித்து, சுவர்க்கலோகத்தை அடையவேண்டுமென்றெல்லாம் சொல்லுபவர்கள் இவர்கள். ஆனால், இவர்களுக்கு சந்ததி வேண்டுமென்ற இச்சையுண்டு. சந்ததியில்லாதவர்களுக்கு நரகமுண்டு என்பது நிச்சயம் என்றும் கூறுவார்கள்.

சந்ததி வேண்டுமானால், இகலோக வாழ்க்கையில் அமர்ந்தே தீரவேண்டும். சந்ததி ஆனந்தத்தைத் தரக்கூடியது. சந்ததிப் பெருக்கத்தினாலல்லவோ உலகமே இருக்கிறது. பிறவி முதல் எல்லாப் பிராணியும் சந்ததிப் பெருக்கத்தையே நோக்கமாகக்கொண்டு விளங்குகின்றன.

துயரம் கலக்காத சுகம் தேடுவது மனிதனுக்கு இயற்கையான குணமே. பிறவி முதல் இந்தச் சுகத்தையே தேடுகிறான். துன்பமென்று ஒன்று இருப்பதினாலேதான் இன்பம் அனுபவிக்க முடிகிறது; துன்பத்தை ஜயித்தல்லவோ இன்பத்தை அடையவேண்டும். இது யாவருக்கும் தெரிந்ததே. துன்பம் நிறைந்ததே உலகம்.

அஹிம்சையைத் துணிந்து புகுத்தினார்கள் என்று சொல்லமுடியாது, மகாத்மா காந்தியே, போரோடும் பொய்யோடும் கொலையோடும் வஞ்சனையோடும் பின்னிக்கிடக்கும் அரசியல்—கிளர்ச்சிகளிலும் சத்தியத்தையும் அஹிம்சையையும் பிணைக்கத் துணிந்தார். இந்தச் சிறப்பியல்பைத்தான் காந்தீயம் என்று சிறப்பித்துப் பேசுகிறோம்.

மழைக்குக் குடையுண்டு. இடிக்குக் குடையுண்டா? "இடிக்குக் குடை பிடித்தவர்" என்கிறார் காந்தியடிகளைக். கவிஞர் பாரதி அஹிம்ஸா தர்ம ஒத்துழையாமையால் அடங்காத ஸர்வாதிகாரத்தையும் அடக்கிவிடலாம் என்பது காந்தியடிகள் கண்ட உண்மையல்லவா?

இப்படிப்பட்ட மஹானைப் பெற்றெடுத்த தாய்நாட்டையே நாமும் தாய் நாடாகக் கொண்டிருப்பது நமக்கு எவ்வளவோ பெருமை தருவதோடு விசேஷமான பொறுப்பையும் தருகிறது.

ஹிந்து தர்மத்தின் கனியாகிய காந்தீயத்தை உலகமெங்கும் பரப்பி, மனிதவர்க்கத்துக்குத் தொண்டு செய்யமுற்படுவது இந்தியாவின் கடமையாகும். இக் கடமையைச் சுதந்தர இந்தியாவே சரியாகச் செய்யமுடியும்.

நாம் பிறந்தவுடனேயே துன்பத்தை உணருகிறோம். தாயின் வயிற்றில் கை கால்களும், உடலும், அடக்கமாகக் காக்கப்பட்டு, சிசுவாகப் பிறந்தவுடனே, கை, கால், உடல், தலை, இவைகளுக்கு ஆதாரமில்லாததுபோலாகிறது. இதுதான் முதல் துன்பம். இந்தத் துன்பத்தின் பிரதிச்செயல் அழுகை. தாயின் வயிற்றிலிருந்த இதமான உஷ்ணமின்றிச் சீதளமான காற்று உடலில் வீசுகிறது; இது ஸ்பர்சத்துன்பம்; சிசு பெருமூச்சுவிட்டுப் பின்பு சரியான மூச்சுவிட்டுக் கொள்ளுகிறது. கண்ணை இதுவரை திறந்து பார்க்காத சிசு இப்போது கண்ணைத் திறந்து பார்க்கிறது. ஒளி உணர்ச்சி உண்டாகிறது. உடனே கண்ணை மூடிக்கொள்ளுகிறது. சுருங்கிக் கிடந்த வயிறு பசித்துன்பத்தை அடைகிறது. இதற்கும் பிரதிச் செயல் அழுகையே. அப்போது பசியைத் தீர்க்கத் தாய் பால் ஊட்டுகிருள். பால் உண்டு இன்பமடைந்து நித்திரை செய்கிறது.

சிசு இப்படி வளரும்போது, சூழ்நிலையிலிருந்து உண்டாகும் உணர்ச்சித் துன்பங்கள் இன்பமாகவே முடிகின்றன. ஒவ்வொரு உணர்ச்சியும் மனத்தில் ஞாபகமாகப் பதிந்து, சிசுவின் செய்கைகளுக்குத் தூண்டுகோலாகக் கூடும். எந்த ஞாபகங்களைப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும், எவற்றை மறக்க வேண்டும் என்பதை எல்லாம் அறிவது புத்தி எனப்படும். புத்தியினுலே சூழ்நிலைக்கு இணங்கி வாழ்கிறது சிசு.

கனி ருசிகரமாயும், அழகாயும் இருப்பதினுல் பறவைகள் கொத்திக் கொண்டு போகின்றன. கனியிலிருந்த விதை வெகு தூரத்தில் விழுந்து, தாய் மரத்துக்குப் போட்டியாகாமல் உணவு கிடைத்து மரமாக வளரும். அழகிய பூக்களும் அடியில் தேனை வைத்துக்கொண்டு வண்டுகளை அழைக்கின்றன. வண்டுகள் வருவதால் பூக்கள் காய்களாகின்றன. இதெல்லாம் இயற்கையின் உபாயங்கள். பிராணிகளில் ஆணும் பெண்ணும் ஒன்றுக்கு ஒன்று ஆசை காட்டுவது இயற்கையாக உள்ள குணம். ஆசையை நிறைவேற்றப் பிராணிகள் கடினமான துயரங்களை அனுபவிக்கின்றன.

சுகத்தையும், ஆனந்தத்தையும், கனியின் அழகையும் ருசியையும் போல் சந்ததி விருத்திக்காகவே இயற்கை இவ்வுலகில் அமைத்திருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். சிசுவை கர்ப்பாசயத்தில் வளர்த்துப் பெறுவது வரையில் தாய் படும் துன்பங்கள் பல; தன் உயிரையே இழந்துவிட நேரிடும். ஆனல், பிறந்த சிசுவைக் கண்டதுமே, தான் பட்ட துயரத்தை எல்லாம் மறந்து விடுவாள் தாய். பிறந்த சிசு அவ்வளவு ஆனந்தத்தைத் தரக்கூடியது. குழந்தைப் பருவம் தாண்டி வாலிபம் அடையும் போதும் தாய் தந்தையர்கள் ஆனந்தமடைவார்கள்; சந்ததி வளர்ந்து பேரன், கொள்ளுப் பேரன் என்றெல்லாம் பெருகும்போதும் இவர்களுக்கு ஆனந்தம் விருத்தியடைந்து கொண்டே இருக்கும். அவர்களுடைய ஸௌக்கியத்தைக் கோருவதற்காகத் தமது தள்ளாமையையும் பாராட்டாமல் உழைப்பார்கள்.

இவையெல்லாம் ஒரே கருத்தை முரசடிக்கின்றன. அதாவது வாழ்வதற்கே உயிர். 'உயிராகப் பிறந்து இவ்வுலகில் அகப்பட்டுக்கொண்டோம். இதைவிட்டு ஓடிப் போக வேண்டும்' என்று எண்ணுபவர்கள்

ஆரோக்கியக் குறைவுள்ளவர்களே; வாழ்க்கைக் கஷ்டங்களைப் பொறுத்து வெற்றிபெறத் திடசரீரம் மட்டுமல்ல, மனோதைரியமும் வேண்டும். மனத்துக்கு எக்காரணத்தினாலும் பலக் குறைவு ஏற்பட்டால், புத்தித் தெளிவு குறைந்து தற்கொலை செய்துகொள்ள எண்ணமுண்டாகலாம். இவர்கள் நோயாளிகளாகவே எண்ணத் தகுந்தவர்கள்; சிகிச்சை செய்யவேண்டும். வயோதிகர்களும் இறப்பைப் பற்றி நினைப்பவர்கள். உடல் க்ஷீணமடைந்து, வாழ்க்கைக் கர்மங்களைச் சரிவரச் செய்யத் திராணியற்றவர்களாகிறார்கள். மரணம் வராதா? என்று நினைப்பார்கள். ஆனால், உடலில் ஒவ்வொரு ஜீவாணுவும், கூடியமட்டும் உயிரைக் காப்பதற்கே முயற்சி எடுத்துக் கொள்ளும். இவர்கள் சிலவேளை மரணம் வந்தாலாகாதா என்று நினைத்தபோதிலும், அந்தரங்கத்தில், கொஞ்ச நாட்கள்கூட வாழ்ந்து ஸம்ஸாரத்துக்கு உழைக்கவேண்டும் என்று ஆசையுண்டு. நோயாளி நோயினால் வருந்தும்போது, "பிராணன் போகாதா? துயர் தீராதா?" என்று சொல்லக்கூடும். நோயைத் தீர்க்கும் மருந்து கிடைக்குமாகில், இந்த எண்ணம் போய்விடும். சிலர், உலக வாழ்க்கையின் கஷ்டங்களைப் பொறுக்க முடியாதென்றும், உயிர் பிழைப்பதில் பயனில்லை என்றும் சொல்லிக்கொண்டே இருப்பார்கள்; ஆனால், ஸம்ஸாரத்திலேயே உழைத்துத் தங்களைவிட மேன்மையான செல்வ நிலையை சம்பாதித்து வைப்பார்கள் தங்களுடைய ஸந்ததிக்கு.

ஃபிராயிட் (Freud) என்ற மானஸசாஸ்திர விஞ்ஞானி, மனிதனுடைய மனப்போக்கிற்கெல்லாம், இருவிதப் பிரேரணைகள் காரணம் என்று உரைக்கிறார். அதாவது:—
1. பால் வேற்றுமையை ஒட்டியது; 2. மரணத்தை ஒட்டியது. இவ்விரண்டும் ஒளியும், இருளும் போலாகும். ஒன்று, பராசக்தி அல்லது கிரியா சக்தியுடையது, மற்றொன்று சிவசக்தி அல்லது அழிவு சக்தியுடையது. பால்வேற்றுமையினால் உத்பவம்; சூழ்நிலையினால் அழிவு. சூழ்நிலையின் இயக்கத்தினால் அழிவைத் தேடுகிறது; பால்வேற்றுமை சூழ்நிலையின் இயக்கத்தை வெல்லுகிறது. இவ்விரண்டும், சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தவாறு வெளிப்படும். சிசுப் பருவத்திலிருந்து வாலிபம் வரையில் பால்வேற்றுமை உணர்ச்சி உன்னதநிலையிலிருக்கும்; பின்பு, இறப்புத் தன்மை வெளிப்பட்டு அதிகரிக்கும் மனப்பான்மையும் இதுபோலவே மாறுபாடு அடையும். பால் வேற்றுமை உணர்ச்சி என்ற சொல்லுக்கு இங்கு கேவலம் ஸம்போகச் செய்கை என்று கருத்துக் கொள்ளலாகாது. கிரியாசக்தி, அடக்கி ஆளும் சக்தி என்றே அறிய வேண்டும். அழிவு சக்தியைத் தடுத்து வெற்றியடைவதே உயிரின் தன்மை. சூழ்நிலையுடன் போர் செய்து வெற்றியடைவதே உயிரின் லக்ஷணம் சூழ்நிலைக்கு ஈடுபட்டு இறப்பது உயிரின் தன்மையன்று.

சிசுப் பருவம் தாண்டியபின் வாலிபமடைந்து சுயேச்சையாக வளருகையில் நல்வாழ்க்கைக்குரிய வசதிகளைத் தேடிக்கொண்டு வாழ்க்கைக் கர்மங்களைச் செய்யவேண்டும். உலக வாழ்விலிருந்து கிடைக்கக்கூடியதை எல்லாம் முற்றிலும் அனுபவித்து, தம் பரிசய ஞானத்தை தமது ஸந்ததிகளில் பிரகாசிக்கச் செய்துதமது ஆத்மாவை ஸந்ததியின் மூலமாக எக்காலமும் விளங்கச் செய்வதே வாழ்க்கையின் ஸபலம்.



1957-ல் ஒரு சந்தோஷ தினத்திற்கு
1945-ல் திட்டம் போடப்படுகிறது

சிறு சேமிப்புக்காரர்கள் 5 ரூபாய்க்கு ஒரு ஸெர்டிபிகேட்டையாவது, ஒன்று 4 அணு, 8 அணு, 1 ரூபாய் மதிப்புள்ள ஸேவிங்ஸ் ஸ்டாம்புகளையாவது வாங்கலாம். ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற யாதொரு ஏஜெண்டினிடமாகிலும், ஸேவிங்ஸ் பீரோ, தபால் ஆபீஸ்கள் ஆகிய இந்த இடங்களிலாகிலும் கிடைக்கும்.

"என் குழந்தைகளின் கலியாணச் செலவுகளை நான் தாங்க முடியுமா?"
இக் கேள்விக்குப் பதில் நீர் இப்போது செய்யும் காரியத்தைப் பொறுத்ததாகும்.

கலியாணங்கள் என்றால் பணச் செலவுதான். பல வருஷங்களுக்கு முன்னால் முன் யோசனையுடன் திட்டம் போட்டு பணம் சேர்த்து, அதைப் புத்திசாலித்தனமாய் வட்டிக்குப் போட்டுவைத்தால்தான் உமது குழந்தைகள் பெரியவர்களாகும்போது தங்கள் கலியாண வாழ்க்கையை சரியான வகையில் நிச்சயமாய் ஆரம்பிக்க முடியும்.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

- ★ பிரதி 10 ரூபாயும் 12 வருஷங்களுக்குப் பிறகு 15 ரூபாய் ஆகிறது.
- ★ தனிவட்டி $4\frac{1}{4}$ சதவீதம். இதற்கு இன்கம் டாக்ஸ் கிடையாது.
- ★ மூன்று வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) அதுவரையில் சேர்ந்துவந்த வட்டியுடன் பணமாக மாற்றிக் கொள்ளலாம்.

AAA.199

மூன்று வருடங்களுக்குப்பிறகு [மாற்றலாமென்றிருந்ததை இரண்டு வருடங்களுக்குப் பிறகே மாற்றலாம் என்று மாற்றியிருக்கின்றனர்.

ஸ்ரீ உ. வே. ப்ர. ப. அண்ணங்கராச்சாரியர் ஸ்வாமி

கம்பன் கவிதை

இரணியன் வதைக் கதை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இரணியன்: (அது கேட்டுச் சிரித்து) பயலே! நீ சொன்னவொருவன் எப்பொருள்களிலும் உட்புகுந்து வசிக்கின்றானென்பதை நன்றாகச் சோதித்துப்பார்த்துப் பின்பு அதற்கேற்ற காரியத்தைச் செய்வேன்; அத்திருடன் இந்தத் தூணினுள்ளே மறைந்து நின்றுள்ளானாயின் அவனது அந்நிலைமையை திருஷ்டாந்தப் படுத்துவாயாக.

பிரகலாதன்: யான் சொன்ன அந்த எம்பெருமான் ஓர் அணுவை நூறு கூறாகப் பகிர்ந்த பகுப்பிலுமிருக்கிறான், மகாமேருமலையிலுமிருக்கிறான், இவ்விடத்துள்ள இத்தூணிலுமிருக்கிறான், நீ அவனைக் குறித்து இகழ்ச்சியாகச் சொன்ன சொற்களிலுமிருக்கிறான்; இவ்வுண்மையை நீ விரைவில் சோதித்து அறிவாயாக.

இரணியன்: உலகம் முழுவதிலும் வியாபித்துள்ளவனாக நீ சொல்லும் அத்திருமாலை இந்தத் தூணினிடத்தே நான் காணுமாறு நீ காட்டாமற் போவையானால் யானையைச் சிங்கம் கொல்வதுபோல உன்னை யான் எளிதிற் கொன்று உனது ரத்தத்தைக் குடித்து உன் உடலையும் தின்பேன்.

பிரகலாதன்: தந்தை! என்னுயிர் உன்னாற் கொல்லப்படுதற்கு எளியதன்று; நான் சொன்னபடி திருமால் நீ தொட்ட இடங்களிலெல்லாம் வெளிப்பட்டு காணப்படாமற் போவனாயின் என்னுயிரை நானே மாய்த்துக்கொள்வேன்; அங்ஙனம் செய்யாமல் பின்பும் இவ்வுலக வாழ்க்கையை விரும்பி ஜீவித்திருப்பேனாயின் அப்பெருமானுக்கு நான் அடியவனல்லேன்.

இங்ஙனம் பிரகலாதன் பிரதிஜ்ஞை பண்ணிக் கூறினது கேட்ட இரணியன் பரிஹாஸக் கருத்துடன் சிரித்துக் கோபித்து எதிரிலுள்ள ஒரு தூணிலே கனவேகமாகத் தன் கையாலறைந்தான். அங்ஙனம் அறைந்தவளவிலே அதனுள்ளே சிவந்த கண்களையுடைய சிங்கமொன்று தனது ஆரவாரத்தால் திக்குக்களைக் கிழித்து அண்டகோளத்தைப் பிறிக்கொண்டு சிரித்தது.

திருமால் அங்ஙனம் சிங்கவடிவத்தோடு தூணினுள்ளே சிரித்தவுடனே பிரகலாதன் பெருமகிழ்ச்சிகொண்டு கூத்தாடினான்; ஆனந்தக் கண்ணீர் விட்டு அழுதான்; கீதம் பாடி ஆரவாரித்தான்; தலைமேல் கை கூப்பினான்; கீழே விழுந்து வணங்கினான்; துள்ளித் துள்ளி குதித்தான்; இனைய பலவுஞ்செய்தான்.

இரணியனோவென்னில் அச்சிரிப்பொலிகேட்டு 'யாரடா நீ? இப்பயல் சொன்ன திருமாலோ நீ? நீ முன்பு எனக்கு அஞ்சிப் புக்கு ஒளித்துக் கொண்டிருந்த கடலினிடம் போதாதென்று இத்தூணைத் தேடி இதனுள்ளும் ஒளித்தாயோ அடா? என்னோடு நீ போர் செய்ய வல்லையாகில் வெளிப்புறப்படடா'' என்று கூசாது இகழ்ந்து கூறினான்.

உடனே அந்தத் தூணும் பிளவுபட்டது; அவ்விடத்தினின்று சிங்கமூர்த்தியும் வெளித் தோன்றிற்று; அத்திருவுருவம் எட்டுத் திசைகளையும் அளாவி வளர்ந்தது; அண்ட

(தொடர்ச்சி 16-ம் பக்கம்·)

மோகினி ஓவியச்சோலை

பாசுரமலர்.

12

1. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ருக்மிணியைத் தேரில் ஏற்றிச் செல்லுதல். 2. ருக்மிணியின் அண்ணனின் சைன்யம் ஸ்ரீ கிருஷ்ணனைப் பின் தொடர்தல். 3. ஸ்ரீ கிருஷ்ணன் ருக்மனைத் தேர்க்காலில் கட்டித் தனது பாணத்தால் அவன் தலையைச் சிரைத்தல். 4. யசோதை கண்ணனை மடியில் வைத்து விளையாடுதல்.

1. ஸ்ரீ ராம லக்ஷ்மண விக்ரகத்தை த்யாகராஜர் துதித்தல். 2. ஸனகாதி முனிவர்கள் உள்பட பலரும் பகவானை வணங்குதல். 3. கவுசிகருடன் ஸ்ரீ ராம லக்ஷ்மணர்கள் செல்கையில் வழியில் சிலையாகக் கிடக்கும் அகலிகையைப் பார்த்தல். 4. பாததூளி பட்டுச் சிலை பெண்ணாகி வணங்குதல்.

ரண்ட பகிரண்டங்களையும் அளாவிற்று; அண்டகடாஹம் கீழும் மேலும் பிறிப் பிளந்தது. அந்த நரசிங்க மூர்த்தி வானத்தில் ஊடுருவிச் சென்ற எல்லையை அறியவல்லாரில்லை. திருவடிகள் பூமியிற் படும்படி நின்ற அச்சமயத்தில் ஸத்ய லோகத்திலிருந்த பிரமன் அப்பொழுதே அச் சிங்கபிரானது திருநாபியில் தோன்றியவன் போல விளங்கினான். [பிரமன் நரசிங்க மூர்த்தியின் நாபியளவிலே நின்றனனென்றவிதனால் அப் பெருமான் மேலோங்கிச் சென்ற எல்லையின் வரையறை அறிய முடியாதென்றதாயிற்று.] அப் பெருமானுடைய திருக்கைகளை இத்தனையென்று கணக்கிடவல்லார் ஆருமில்லை. தன்னெதிர்ப்பட்ட அசுரசேனையிலுள்ள ஆயிரங்கோடி பேரில் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு கையால் அள்ளிக் கொண்டனனாதலால் அத் திருக்கைகளை எங்ஙனே எண்ணி முடிப்பது. ஆயிரங்கோடி வெள்ளமாக எதிர்ப்பட்ட அசுர சேனையிலுள்ள ஒவ்வொருவர்க்கும் எதிராக ஒவ்வொரு திருமுகமும் இவ்விரண்டு திருக்கைகளும் அம்முகங்களிளெல்லாம் மூன்று மூன்று திருக்கண்களுமாக அப்பொழுது எம்பெருமான் கொண்ட விசுவரூபம் அரிய பெரிய காட்சியாக இருந்தது.

அச் சிங்க வடிவத்தின் பிடரியில் எழுந்து வளைந்து தொங்குகின்ற நீண்ட மயிர்த் தொகுதியானது பிரளய காலாக்கினியின் ஜ்வாலைகளை வென்றிட்டது. அச் சிங்கமூர்த்தியின் உள் நின்று வெளிப்படுகிற சுவாசக் காற்றானது ஊழிக் காலத்துப் பிரசண்ட மாருதத்தை வென்றிட்டது. (அடுத்த இதழில் முடிவு)

பெரியாழ்வார் திருமொழி

உருப்பிணிநங்கையைத் தேரேற்றிக்கொண்டு★
விருப்புற்றங்கேக விரைந்தெதிர்வந்து★
செருக்குற்றான் வீரஞ்சிதைய★ தலையைச்
சிரைத்திட்டான்வன்மையைப்பாடிப்பற
தேவகிசிங்கத்தைப்பாடிப்பற

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தனை

ராகம் : அஸிந்தவாஹினி — தாளம் : ஆதி

பல்லவி

ஸ்ரீராம பாதமா நீக்ருப -சாலுனே சித்தானிகி ராவே (ஸ்ரீ)

அநுபல்லவி

வாரிஜபவ - ஸனக ஸனந்தன
வாஸவாதி நாரதாது லெல்ல பூஜிஞ்சே (ஸ்ரீ)

சரணம்

தாரினி - சிலையை தாபமு தாளக-வாரமு-கன்னீருனு ரால்சக
சூர- அஹல்யனு ஜூசிப் ரோசின ஆ
ரீதி- தன்யு ஜேய வேஸ்ரீ தியாக- ராஜ- கேயமா (ஸ்ரீ)

இவை சம்பந்தமான படங்களை 14-15 வது பக்கத்தில் காணவும்

ஆசைப்ரவாகம்

வை.மு.கோ

67.வது நவீனம்...

சுலோசனா தனது உணர்ச்சிகளை மறைத்துக்கொண்டு தந்தையை வரவேற்று உபசரித்துப் பின்... 'என்னாப்பா கடிதங்கூட போடாமல் திடீரென்று வந்தீர்கள்? ஏதாவது ஆபீஸ் காரியமோ?'' என்று கேட்டாள்.

தகப்பனார்:— ஆபீஸ் காரியமும் இல்லை. அவதியுமில்லை. உன்னுடைய அதிக `ப்ரஸங்கித்தனத்தைக் கேள்விப்பட்டு ரத்தம் கொதிப்படைந்துவிட்டது. அதனால் லீவு போட்டுவிட்டு வந்தேன். உன்னுடைய துடுக்குத்தனத்திற்கு அளவே இல்லை போலிருக்கிறது. அந்த துஷ்டக் கழுதை சுபத்திரா வந்து உன்னைக் கலைத்துக் குட்டிச் சுவரடித்து உன்னை ஆண்டியாகிவிடப் போதிப்பதும் நீ அதில்மயங்கி சகலத்தையும் விற்றுவிட்டதும் இதென்ன செய்கை? உனக்கு யாரும் கேட்பார் இல்லை என்று எண்ணினாயா! நாங்கள் எல்லாரும் இறந்துவிட்டதாகத் தலை முழுகிவிட்டாயா... உன்னைத் தனிமையில் விட்டதற்குப் பலன்போதும். எங்கே அந்த பணம்?...எடு இப்படி...உம்... இப்போதே கிளம்பு. இனி உன் தாயாரிருக்குமிடத்தில் தான் நீ இருக்க வேண்டும். தானமாம்; தருமமாம். வார்பண்டாம் வெண்டைக்காயாம். போதும் போதும் உன் ஆட்டம்!...ஒன்றா இரண்டா! ஒன்னரை லக்ஷ ரூபாய் என்றால் அதன் மதிப்பு உனக்குத் தெரியவில்லைபோலிருக்கிறது. இவைகளுக்கெல்லாம் நீ அதிகாரியல்ல. நான் அதிகாரி என்பது நினைவிருக்கட்டும். ஏதோ நீ சந்தோஷமாயிருப்பதற்காக இத்தனை செல்வாக்கும் சுதந்தரமும் உனக்குக் கொடுத்தேனேயன்றி நான் செய்து கொடுத்த நகைகள், நான் வாங்கிக்கொடுத்த மற்ற இதர சாமான்கள், சேலைகள் முதலியவைகளை நீ விற்றுவிட உனக்கு உரிமை இல்லை. எடு பணத்தை. இந்த பட்டிக்காட்டில் இத்தனை பெருந்தொகையை நீ ஒண்டிக்காரி கையில் வைத்திருப்பதால் எத்தனை ஆபத்து என்பதை அறவே மறந்துவிட்டாய் போலும். என்ன ஊமைமாதிரி நிற்கிறாய்? நான் பேசுவதாக நினைக்கிறாயா! நாய் குலைப்பதாக நினைக்கிறாயா?—என்று கர்ஜித்தார்.

திடீரென்று சுலோசனாவின் கோபம் உச்சத்தை எட்டியது, அவளையும் மீறி அவள் வாயிலிருந்து "நாய் குலைப்பதாக நினைக்கவில்லை. ஏனெனில் துஷ்டர்களின் வருகையை, திருடர்களின் வருகையைக் காட்டித்தான் நாய் குலைக்கும்," என்று வெடுக்கென்று கூறிவிட்டாள்.

183108

அதே க்ஷணம் அவள் ப்ரமிக்கும்படி தகப்பனார் ஆவேசத்துடன் "என்ன சொன்னாய்! என்ன சொன்னாய்!" என்று வெகு உக்ரத்தோடு கேட்டவாறு சுலோசனாவின் கன்னத்தில் பளார் என்று அறைந்துப் பின் "இப்போது தெரிகிறது உன் கொழுப்பிற்குக்காரணம். அந்த குடிகெடுக்கும் நாய் சுபத்திராவின் உபதேசந்தான் இது. தான் கலெக்டரின் மனைவி என்கிற இறுமாப்புடனும் தான் ஏதோ பெரிய சேவை செய்வதுபோல் நடித்து ஊரை ஏமாற்றிப் பணம் பறித்துத் தாம் தின்று கொழுக்கும், லஞ்சம் வாங்கும் கலெக்டரின் மனைவி என்கிற திமிரால் உன் தலையில் மிளகாயரைத்து ஒன்னரை

லக்ஷத்தை ஒரே மட்டாக விழுங்கி ஏப்பம்விட நினைத்துவிட்டாள். இந்த சதி எனக்குத் தெரியாதென்று எண்ணதே. அந்த தான்தோனிப் பயலுக்கு எப்படியாவது ஒரு கரும் புள்ளியை உண்டாக்கி கலெக்டர் வேலையில் கல்லேத் தூக்கிப் போட்டு விட்டு மறுகாரியம் செய்கிறேன். என் செல்வாக்கின் சிறப்பை நீ அப்புறந்தான் உணர்வாய். இனி அந்தக் கழுதை இங்கு காலே வைக் கட்டும் சொல்கிறேன்...எடு உன் பணப்பெட்டியை.....என்று கூச்ச லிட்டார்.

முரட்டுப் பிடிவாத குணத்தினல் அந்த மனிதன் எதை வேண்டுமாயி னும் செய்துவிடுவான் என்பது சுலோசனவுக்கு, தன் கணவன் வேலையில் மண்ணேப் போட்டதிலி ருந்தே தெரியுமாதலால் அவளுக்கு கபீர் என்று தூக்கிவாரிப் போட் டது. தன் பொருட்டாக இத்தனே உபகாரம் செய்யும் சுபத்திராவுக்கு ப்ரதி உபகாரமாய் பெரும் பாறை யைப் புரட்டிவிடப் போ கி ரு ரே! என்ன செய்வது என்று துடித்த வாறு, தைரியத்தை இழக்காமல் "அப்பா! அனவச்யமாக சுபத்திரா வைத் திட்டவேண்டாம். ஆதியி லேயே அவள் எழுதிய கடிதத்தை நான் மதித்திருந்தால் இந்த கதிக்கு வந்தே இருக்கமாட்டேன். இல்லாத தால்தான் இன்று உலகம் என் னேக் கொலேக்காரி என்றும் தூற் றிச் சிரிக்கும்படியான நிலேமைக் குக் கொண்டுவந்து விட்டது.

எ ன க் கெ ன் று கொ டு த் த சொத்தை என் இஷ்டப்படிக்கு எது வேண்டுமாயினும் செய்துகொள் ளும் உரிமை இருப்பதனல்தான் நானே என் பொருளே விற்றேன். இதைத் திருப்பிக்கொடுக்க முடி யாது. இத்தனே நாளேப்போல் நான் இனியும் உங்கள் கையில் ஆடும் நாட்டிய பொம்மையல்ல. நான் மேஜராகிய ஒரு தனி மனுஷி என் பது நினைவிருக்கட்டும். வீண் மிரட் டலும் உருட்டலும் வேண்டாம். 'தாயும் மகளும் ஆனலும் வாயும் வயிறும் வேறுதான்' என்பது மறக்கவேண்டாம். என்னுடைய தீர்மானத்தை நான் மாற்றமுடி யாது. வீண் சச்சரவு செய்வதில் பலனில்லே" என்று வெகு முடுக்கா கக் கூறினள்.

தகப்பனரின் எரிச்சலும் ஆவேச மும் கரைபுரண்டன. அவளுடைய பெட்டியைத் தூக்கிக்கொண்டுவந்து நடுவே வைத்து "இதைத் திறக்கி ருயா! இல்லேயா! உன்மேல் வந்த கொலேக்கேஸ் விஷயமாக சரியான சாக்ஷி யகப்படாது உன்னே விடுதலே செய்துவிட்டதைப் பலபேர் ஆக்ஷே பித்து அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதி மறுபடியும் சரியான சாக்ஷி யுடன் உன்னேக் கைதியாக்கிவிடப் போவதாக மொட்டைக் கடிதம் ஒன்று எனக்கு வந்திருக்கிறது. உன்னல் என் மானம் போகிறது. இந்தப் பணத்திலிருந்து தகுந்த ஆசாமிகளுக்கு வாய்க்கரிசி போட்டு உன்னேத் தப்பவைக்கவேண்டும். இந்த எழவுக்காகவே இப் பணத் தைத் துலேக்கவேண்டும்....எடு.... இன்னமும் தயக்கமா?' என்று மீண் டும் கர்ஜித்தார்.

சுலோசன அத்தனே ஆத்திரத்தி லும் ஒரு சோகச்சிரிப்பு சிரித்தாள். "அப்பா! எப்படி எப்படி எல்லாம் பேசினல் இந்த பணத்தைப் பிடுங் கிக்கொண்டு போகலாம் என்கிற தந்திரத்தைக் கையாண்டு பேசுகி றீர்கள். இதற்கெல்லாமா நான் இனி மசியப்போகிறேன்? அந்தப் பணம் எங்கு போய்ச் சேரவேண் டுமோ, அங்கு சேர்ந்தாகிவிட்டது.

என் தலையெழுத்தை இனியாராலும் மாற்றமுடியாது என்பதை மறக்க வேண்டாம். என்னை விடுதலையாக்கி விட்டபோதிலும் கொலைக்காரி என்கிற பெயர் எடுத்துவிட்டது இனி மறையப்போவதில்லை. மறுபடியும் அந்த பூதம் என்னை விழுங்கவந்தால் தாராளமாகவிழுங்கி ஏப்பமிடட்டும். சத்தியத்தையும், தர்மத்தையும், கடமையையும் மீறி மிருகத்தனமாக உழன்ற என் சரீரத்தைத் தூக்கு மரம் தாங்கி நிற்கட்டும். இனி அதனால் எனக்கு அணுவளவுகூடக் கவலையோ, அவமானமோ, துக்கமோ எதுவுமே இல்லை. எனக்குத் தகுந்த சிக்ஷை அதுதான் என்று சந்தோஷமே அடைகிறேன். ஆகையால் வீண் மிரட்டல் வேண்டாம். பணத்தைக் கொண்டு நான் மீட்சியடையவும் இல்லை. எனக்கு எப்படி நடக்கவேண்டும் என்பது தெரியும்'' என்று படபடத்துக் கூறும்போது அவள் தகப்பனார் முரட்டுத்தனமாக அவள் கைப்பெட்டியை ஒரே மூச்சில் உடைத்து அதனுள் பணமிருக்கிறதா என்று கிளறிக்கொண்டிருக்கையில் மற்றொரு கார் வாசலில் வந்து நின்ற

தும் போலீஸ்காரர்கள் அதிலிருந்து இறங்கி உள்ளே வருவதைக்கண்டு தகப்பனும் பெண்ணும் கதிகலங்கி நின்றார்கள். உலகமே தட்டாமாலை யாடுவதுபோல் தோன்றியது.

48

உஷாதேவியின் கொலைக் கேஸ் முடிவைப்பற்றி பொதுஜனங்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அன்று நியாயாதிபதி தீர்ப்பு கூறும் நாள். எங்கு பார்த்தாலும் இதே பேச்சாகவிருந்தது. சுதர்சனன்மீது சாக்ஷிகள் வெட்ட வெளிச்சமாகி விட்டதால் அவனுக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் 14 வருஷம் கடுங்காவல் விதிக்கப்பட்ட செய்தி ஒரு க்ஷணத்தில் தீ போல் உலகமெங்கும் பரவி விட்டது. "என்ன அனியாயம்! பணத்தினாலும் சிலருடைய உளவாலும் சுலோசனை தப்பித்துக் கொண்டுவிட்டாளே! இந்த கொலைக்கு அவள்தான் கட்டாயம் காரணமாக இருக்கவேண்டும். தனக்குப் போட்டியாக அவள் இருப்பதால் பொறாமைகொண்டு இம்மாதிரி செய்தது எத்தனை பகிரங்கமாகத் தெரிந்தும் லஞ்சப்பேயின் தாண்டவத்தினால் பாவி தப்பித்துக்கொண்டாளே!"

என்று பொது ஜனங்கள் நடுத் தெருவில் நின்று பகிரங்கமாகத் திட்டினார்கள். பசுவைக் கொன்று விட்டு செருப்புதானம் செய்தது போல் இவள் கருக்கொலை, பெண் கொலை, பதிக்கொலை முதலியவைகளை மனந்துணிந்து செய்துவிட்டு இனி உலகத்தை ஏமாற்றித் தான் மகா பதிவ்ருதை, மகா உத்தமி, மகா த்யாகபிம்பம் என்று பறை சாற்றிக்கொள்வதற்காக தனது சகல சொத்துக்களையும் விற்று ஒன்னரை லக்ஷம் ரூபாய் இந்திய சிப்பாய்களின் உதவிக்காகவும் யுத்தநிதிக்காகவும் கொடுக்கப் போகிறாளாமே ..என்ன த்யாகம்!... என்ன பதிவ்ருதை!"...என்று ஏசிப் பேசிக்கொள்வது சுலோசனை க்ராமாந்திரத்திலிருந்தும் காதில் விழாமலில்லை.

மேல்படி தண்டனையான பிறகு சுதர்சனின் ஆட்களில் சிலர் "சுதர்சனை மட்டும் தண்டித்து சுலோசனையை விட்டுவிட்டது என்ன நியாயம்? அவளைச் சும்மாவிட்டோமா பார். கொன்று விடுகிறோம். குத்தி விடுகிறோம்." என்றெல்லாம் குதிக்கிறார்கள். "அவளுடைய பணத்தைக் கொள்ளையடித்து அவள் வாயில் மண்ணைப் போட்டுவிடுகிறோம்." என்று ஒரு சாரார் உறுமுவதை சுபத்திராவுக்கு வேண்டியவர்கள் அறிந்து அதை அவனிடம் தெரிவித்தார்கள்.

சுலோசனையைப்பற்றி வெளியுலகம் எப்படிப் பேசியபோதிலும் அவளிடத்தில் சுபத்திராவுக்கு பூர்ணமான நம்பிக்கையும் பச்சாத்தாபமும் ஆழமாகப் பதிந்திருந்ததால் அவளுக்கு எவ்விதமான தீங்கும் வாராமல் காப்பதற்கே தோன்றியதால் தன் கணவனிடம் விஷயத்தைக்கூறி, தகுந்த போலீஸ் பந்தோபஸ்துடன் அவளைத் தம்முடைய பாதுகாப்பிலேயேயிருக்கும்படியான ஏற்பாடு செய்யும்படி வேண்டிக்கொண்டாள்.

குற்றம் செய்தவர்கள் அக்குற்றத்தை ஒப்புக்கொண்டு வருந்துகிறவர்களை அம்மட்டுடன் விட்டு விட்டு மன்னித்து ரக்ஷிப்பதுதான் அழகு; தர்மமும்கூட. ஆகையால் சுபத்திராவின் கணவர் பெரிய பதவியிலிருப்பதால் அவர் போலீஸ்காரரை அனுப்பி தக்க பந்தோபஸ்துடன் சுலோசனையையும் அவள் கைவச

முள்ள ஒன்னரை லக்ஷம் பணத்தை யும் தம்மிடம் ஜாக்ரதையாகக் கொண்டு சேர்க்கும்படி ஆக்ஞா பித்தார்.

முன் அத்யாயத்தின் இறுதியில் சுலோசனுவின் பிதாவும் சுலோசனு வும் கடுமையான மனஸ்தாபத் துடன் பேசிக்கொண்டிருக்கையில் கலெக்டரால் அனுப்பப்பட்ட போலீஸ்காரர்கள்தான் வந்தது. அவர்களைக்கண்டதும் சுலோசனு வின் குலை நடுங்கியது. ஏற்கெனவே சுதர்சனுக்கு தண்டனையாகி விட்ட தால் அது சம்மந்தமாகத் தன்மீது ஏதாவது குற்றங்கண்டுபிடித்துத் தான் வந்துவிட்டார்களோ! என்கிற திகில் அவளை ஒரு கலக்குக் கலக்கி விட்டது.

அவள் தகப்பனுரையும் ஒரு துள்ளுதுள்ளச் செய்ததால் பணத் தைத்தேடும் கைகள் விலவிலத்து நடுங்கி நின்றன. வந்தவர்கள் இவர் களுடைய அலறலைக்கண்டு பரிதா பத்துடன் சுலோசனுவைப் பார்த்து "அம்மணீ! பயப்படாதீர்கள். நாங்கள் கலெக்டர் அனுப்பி வந் திருக்கிறோம். இதோ! கலெக்டரின் மனைவியார் ஒரு கடிதம் கொடுத் திருக்கிருர்." என்று சுபத்திரா கொடுத்த கடிதத்தைக் கொடுத் தார்கள்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட பிறகே சுலோசனுவுக்கு உயிர் வந் தது. அடுத்த க்ஷணமே அவளுடைய நினைவு தன் கைப் பெட்டியின்மீது தாவியது. அதை சடக்கென்று எடுத் துக்கொண்டு தன்னருகில் வைத்துப் பின் போலீஸ்காரர்களை உட்காரச் சொல்லிவிட்டுக் கடிதத்தைப் படிக்க வாரம்பித்தாள்.

"அன்புமிக்க சுலோசனுவுக்கு,

என் கைக்குழந்தைக்கு ஒரு மாத காலமாய் உடம்பு சரியில்லாததா லும் என் கணவர் தன் உத்யோக நிமித்தம் பல ஊர்களுக்குப் போக நேர்ந்ததனுலும் நான் உடனே மறு படியும் உன்னை வந்து பார்க்கமுடிய வில்லை. மாமிஸத்துண்டுகளுக்கு கழுகுகளும் காக்கைகளும் ஓயாது வட்டமிடுவதுபோல் உன்னிடம் உள்ள பணத்தைக் கொத்துவதற் காகப் பல பறவைகள் உன்னையறி யாமல் உன்னைச் சுற்றி வட்டமிடு வதை நாங்களறிந்தோம். அதோடு சுதர்சனின் ஆட்கள் உன்னைக் கொன்றுவிடவே முயற்சிப்பதையும் அறிந்தேன். உன் பிதா உன்மீது கடுங்கோபமுற்று எங்களையும் திட்டு வதையும் அறிந்தேன். உன்னு டைய பாதுகாப்பிற்காக என் கண வர் போலீஸாரை அனுப்பியிருக் கிருர். நீ என்னவோ! ஏதோ என்று பயப்படாமலிருக்கும் பொருட்டு இதை நான் எழுதித் தருகிறேன். அவர்களுடன் நீ உன் தர்மநிதி சகி தம் உடனே புறப்பட்டு வந்துவிடு. நாளையே உன்னை முன் தெரிவித்தது போல் யுத்தப்படையின் உபகாரத் தொழிலில் சேர்த்துவிடுகிறேன். மற்றவை பிறகு. உடனே புறப்படு.

உன் ப்ரிய
சுபத்திரா."

இதைப் படித்ததும் அவள் முகம் மலர்ந்தது. சந்தோஷம் தாண்டவ மாடியது. உடனே தனது சாமான் களில் முக்யமானவற்றை எடுத்துக் கொண்டாள். பணப் பெட்டியை போலீஸ் அதிகாரியிடம் கொடுத்துப் பின், "அப்பா! நீங்கள் இங்கிருக்கப் போகிறீர்களா! ஊருக்குப் போகப் போகிறீர்களா! நான் அவசரமாக இப்போதே சுபத்திராவிடம் போகி றேன். அனுவசியமாக என்னை இனி தடைசெய்து மனத்தைப் புண்ணுக் குவதில் உபயோகமில்லை. ஆதி முதல் என் மூளையை மழுங்கடித்து

என்னைப் பாழாக்கி என்னை உலக முள்ளளவும் தூற்றவும், சிரித்து ஏளனம் செய்யவும் செய்துவிட்ட சதி போதும்.

என்னுடைய பெண்தர்மத்தையும் கடமையையும் நான் இழந்ததற்குச் சரியான ப்ராயச்சித்தம் பகவான் கொடுத்துவிட்டார். ஆகையால் இனியும் நான் உங்கள் கைக்குள் அடங்கும் பொம்மையல்ல. என்னுடைய ஆட்டத்தால் சம்பாதித்த சகல சொத்துக்களும் என்னுடைய சொந்த சொத்தாகும். அதைக் கேட்க உங்களுக்குரிமை கிடையாது. நான் போகிறேன். என்னைப் பற்றி நீங்கள் இனி எவ்வித கவலையும் கொள்ளவேண்டாம். என் தாயாருக்கு என் வந்தனத்தைச் செலுத்துங்கள்.''

என்று வெகு கடுமையான தொனியில் கூறிவிட்டு போலீஸாருடன் புறப்பட்டு காரிலேயே போய் விட்டாள். அவளுடைய தகப்பனுருக்கு இன்னது சொல்வது, செய்வது என்று தெரியவில்லை. எதிரில் போலீஸ் உத்யோகஸ்தர்கள் இருப்பதால் இவருடைய வாலாட்டுதல் ஒன்றும் சாயவில்லை. பதிலே பேசாமல் கண்களில் தீப்பொறி பறக்க அப்படியே நின்றார். அவர் வாய் ஏதோ முணுமுணுத்தது.

49

சதா குண்டுச் சத்தமும் துப்பாக்கிச் சத்தமும் அபாயச் சங்கின் அழுகுரலின் அலறலும் கேட்டுக் கேட்டு காதுகள் புளித்துப் போய்க்கிடக்கும் இந்திய பட்டாளங்களின் சந்தோஷத்திற்காக ரேடியோ செட்டு, க்ராமபோன் மெஷின், பலவிதமான ரிகார்டுகள், கேரம்போர்டு இவை போன்ற அனேகவிதமான விளையாட்டுச் சாதனங்கள் கொடுத்திருப்பதால் ஓய்வு நேரங்களில் இவ்வித கேளிக்கைகளில் பொழுதைச்செல விடுவார்கள்.

ரகுநாதன் இத்தகைய உல்லாஸ விஷயங்களில் எப்போதுமே கலக்க மாட்டான். சதா உயர்ந்த புத்தகங்கள் படிப்பதில் அவனுடைய பொழுதைச் செலவிட்டு வந்தான். ஆத்மார்த்தகமான பக்தி செய்வதில் மிச்சப் பொழுதைப் பயன்படுத்தி மனத்தை ஒரே நிலையில் தீவிர வைராக்யத்தில் மாற்றிக்கொண்டதில் அசல் சாமியாராகவே ஆய்விட்டான். யுத்த சேவையிலிருக்கும் போதே தன்னுயிர் போய்விடவேண்டும் என்பது இவனுடைய இதய பூர்வகமான ப்ரார்த்தனையாகும்.

அவ்வப்போது உலகவிஷயங்களை அறிவதற்காக ஏதேனும் சில பத்திரிகைகள்மட்டும் படிப்பான். அன்று வந்த பத்திரிகையைப் பிரித்ததும் அதில் கண்ணில் பட்ட தேதி இவனைக் கலக்கியது. நாட்கள் ஆயிரக் கணக்கில் உருண்டோடிவிட்டதெனினும் அன்றே அச்சம்பவம் நடப்பதுபோன்று ஒரு மகத்தான அதிர்ச்சி அவனைத் தாக்கியது. சுலோசனா இறுதியாகத் தனக்குக் கடிதம் எழுதிவைத்துச் சென்றதும் தான் கடிதத்தைக் கண்டு இந்தத் துறவுக்கோலம் பூண்டதுமான அதே தேதிதான் இன்று என்பதைப் பார்க்க அவனையறியாத துக்கம் பீறிக்கொண்டு வந்துவிட்டது.

''இதற்குள் இத்தனை வருஷங்கள் ஓடி மறைந்துவிட்டதா! என்ன ஆச்சரியம்!'' என்று வியந்தவாறு சற்றுநேரம் மவுனத்திலாழ்ந்தான். முதலில் தான் ராணுவத்தில் சேர்ந்து பர்மாபோர்முனையில் தோல்வியுற்ற பிறகு வேறு அரங்கம் சென்று வெற்றிமேல் வெற்றி பெற்று பட்டமும் பதவியும் அடைந்ததும், திரும்பவும் பர்மா போர்முனைக்கே

தன்னை யனுப்ப அதிகாரிகள் உத்தேசித்திருப்பதால் தான் மீண்டும் பர்மாவுக்குச் சென்று அந்த இடத்திலாவது வீரசொர்க்கம் கிடைக்குமா! என்கிற ஏக்கத்தில் நினைவு புரண்டு அதே யோசனையில் பொழுது போவதே தெரியாமல் போய்விட்டது.

அச்சமயம் இவனுக்கு ஒரு பெரிய கவர் வந்திருப்பதை ஒரு சேவகன் கொண்டு கொடுத்தான். 'இதுவரையில் இல்லாது இப்போது தாய்ப் பாஷையில் இத்தனை பெரிய கவர் யார் எழுதியிருக்கப்போகிறார்கள்!' என்று யோசித்தவாறு கடிதத்தைப் படிக்கவாரம்பித்தான்.

''என்னுருயிர் ரகுநாத்!

உன்னுடைய அபரிமிதமான அன்பின் ஆதரவால் நான் இப்போது இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனாராகி, முன்னிலும் உயர்ந்த வேலையில் 150 ரூபாய் சம்பளத்தில் இருக்கிறேன். ஆனால் எனக்கு இத்தனை சுகபோகங்களைச் செய்துவைத்த உன்னை கண்ணால் காணவும் முடியாது விதி செய்துவிட்டதை எண்ணி உன் தங்கை கமலா சதா விசனிக்கிருள். உன்னிருப்பிடத்தைத் தேடித் தேடி எப்படி எல்லாமோ அலைந்தும் இத்தனை வருஷங்களாகக் கிடைக்கவில்லை. தற்செயலாக நான் என் ஆபீஸ் ட்யூட்டியில் வெளியூர் சென்ற போது லீவில் வந்துள்ள ஒரு ஸுபேதாரை ரயில் ப்ரயாணத்தில் கண்டு சினேகம் செய்துகொண்டு அவர்மூலம் உன்னிருப்பிடத்தை அறிந்து இதை எழுதுகிறேன்.

உனக்கு உயரியபட்டம் வந்திருப்பதாயும் நீ இராணுவ வட்டாரங்களில் மங்காப் புகழுடன் ப்ரகாசிப்பதாயும் அந்த ஸுபேதார் சொன்னூர். கேட்க ஒருபுறம் மகிழ்ச்சிதான். ஆனால் உனது சன்யாசித்தனத்தைக் கண்டு உள்ளம் துடிக்கிறது. உன் வாழ்க்கையின் ஆனந்தப் பாதையை பாழ்படுத்தி முள் வேலி இட்ட புண்ணியவதியைப் பற்றி நீ அறிந்திருப்பாயோ என்னவோ! நீ சம்சார விஷயம் எதையுமே லக்ஷியம் செய்யாது சாமியாராகவிருப்பதாய் அந்த சுபேதார் சொன்னூர். ஆகையால் உனக்கு வேண்டாத விஷயமாயினும் தெரிந்திருக்கட்டும் என்று இதை எழுதுகிறேன்.

எப்பேர்ப்பட்ட நெருப்பும் சகலத்தையும் சாம்பராக்கி ஹதம் செய்துவிட்டுத் தன் உக்ரகம் குறைந்த பிறகு ஆறி வெறும் நீருயும் கரியாயும் போய்விடுவதை நாம் ப்ரத்யக்ஷமாகக் காண்கிறோம். அதேபோல் சுலோசனுவின் கதியும் ஆய்விட்டது. அவளுடைய கர்வம், திமிர் முதலிய நெருப்பினுல் உன்னையும் உனது வம்சத்தை விருத்தியாக்கவந்த சிசுவையும் எரித்து அதம் செய்து ருத்திரத்தாண்டவம் ஓய்ந்த பிறகு இப்போது வெறும் சாம்பலாய், கரியாய், நீருய்க் கிடக்கிருள்.

சுதர்சனனின் சகவாஸத்தினுல் கொலைப்பாதகி என்கிற பெயர் பெற்றுச் சிறையிலும் இருந்து லஞ்சப் பேயின் உதவியால் திரும்பி வந்த பிறகு ஞானேதயமாகிவிட்டது. அவளுடைய சினேகிதி ஸ்ரீமதி சுபத்திராவின் உதவியால் தனது சகலமான சொத்துக்களையும் விற்று ஒன்னரை லக்ஷ ரூபாயை அப்படியே இந்திய சிப்பாய்களின் நிதிக்குக் கொடுத்துவிட்டு அவள் சன்யாசியாகி எங்கேயோ போய்விட்டாளாம். ஊரில் இதே பேச்சுதான். தான் தருமம் செய்ததுகூட பத்திரிகையில் வரவேண்டாம் என்று கண்டிப்பாய்க்கூறி ரகஸியமாகவே

கொடுத்துவிட்டாளாம். அவள் எங்குபோனுள், என்ன ஆனுள் என்பதே யாருக்கும் தெரியாது. சிலர் தற்கொலை புரிந்துகொண்டிருப்பாள் என்று கூறுகிருர்கள். சிலர் பக்தி செய்துகொண்டே வடக்கேயுள்ள ஒரு ஆச்ரமத்திற்குப் போய்விட்டதாகக் கூறுகிருர்கள். உண்மை ஆண்டவனுக்கே வெளிச்சம். ஆனல் இனி கெட்டுப்போகமாட்டாள். இது நிச்சயம். அவள் தான் செய்த த்ரோகத்தை நன்ருக உணர்ந்துவிட்டாள்.

தன் கதையை ஒரு சிறிய நாடகமாக எழுதி வெளியிட்டு அந்த பணத்தையும் சிப்பாய்களின் நிதிக்கே கொடுத்துவிட்டாள். தன் பெயரையும் உன் பெயரையும் மாற்றிவிட்டுக் கதை எழுதியிருக்கிருள். "உலகத்தில் இனி என்னைப் போல் பாவியாகி விடாதீர்கள். நான் என்னறிவிழந்து நடந்ததன் பலன் அனுபவித்துவிட்டேன். இனிமேல் கண்ணீர்விட்டுப் பலனில்லை. ஆகையால் கணவனே தெய்வம். அவனே கதி. அவனே சகலமும் என்று நம்பி வாழுங்கள். அதிலும் உங்கள் மீது உயிராயுள்ள கணவனை ஒரு போதும் மனம் நோகச் செய்யாதீர்கள்."

என்றெல்லாம் தான் கருக்கொலை செய்ததுமுதல் சகலத்தையும் அப்படியே எழுதியிருக்கிருள். அதை சமீபத்தில் உத்யோகஸ்தர்கள் ஆடிஏராளமான பணம் வசூலித்து இந்திய சிப்பாய் நிதிக்கே அனுப்பினர்கள். இந்த தகவல்கள் உனக்குக் கட்டாயம் தெரியவேண்டும் என்பதால் இதை அதிகப்ரஸங்கித்தனமாய் எழுதியிருக்கிறேன். கோபிக்காதே. மன்னித்துவிடு.

உன்னைப் பிரிந்து உன் மாமனும் மாமியும் உருகுகிருர்கள். எப்படியாவது லீவு வாங்கிக்கொண்டு ஒரு தரம் வந்துவிட்டுப் போ! கிழப் பிராணன்களை நீ வருத்தாதே. உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. சதா உன் நினைவாகவே பேத்துகிருர்கள். உன் தங்கை கமலா உன் ஞாபகார்த்தமாய் உன் பெயரையே மூத்தக் குழந்தைக்கு வைத்து ரகு ரகு என்றே அழைக்கிருள். அதுவே எங்கள் எல்லோருக்கும் ஒரு த்ருப்தியாயிருக்கிறது. ஒரு வரி கடிதமாவது எழுது. மறக்காதே.

உன் ப்ரிய
கேசவன்."

கடிதத்தை வெகு ப்ரயாஸையுடன் படித்தாள். மூளை அப்படியே குழம்பிவிடும்போலாகிக் கனத்தது. இருகைகளாலும் இறுகத் தலையைப் பிடித்துக்கொண்டு அப்படியே படுத்தான். உலகம் ஒரே இருளடைந்து காணப்பட்டது.

50

எங்குபார்த்தாலும் பெண்மணிகளின் யுத்தஸேவையைப் புகழாதவர்களில்லை. பெண்கள் உதவிப் படையில் ஆயிரக்கணக்கான பெண்கள் வந்து சேர்ந்து பலதுறைகளிலும் ஸேவைசெய்து சிறப்புறும் கோஷ்டியில் சுபத்திராவின் உதவியினல் சுலோசனுவும் இந்த உதவிப் படையில் சேர்ந்து பயிற்சி பெற்று யுத்த அரங்கத்திற்கும் போவதற்குத் தயாராகிவிட்டாள். ஆனல் தான் தருமத்திற்குப் பணம் கொடுத்ததோ, இந்த உதவிப் படையில் சேர்ந்ததோ ஒருவருக்குமே தெரியக்கூடாதென்றும் சுலோசனு என்கிற பெயர் தனக்கு அடியோடு பிடிக்கவில்லைஎன்றும்அது அதிர்ஷ்டஹீனமானபெயர் என்றும் தோன்றுவதால் அதை மாற்றிவிட்டு உதவிப் படையில் சேரும்போது சாக்ஷாத் அம்பிகையின் பெயராகிய மீனுக்ஷி

என்று மாற்றி வைத்துக் கொண்டாள்.

"சுலோசனா என்கிற பெயரும் அதில் புகுந்திருந்தவரையிலிருந்த ஆடம்பரமும் அதோடு இறந்து ஒழியட்டும். அவளுடைய சகலமும் செத்துவிட்டதாகவே மறைந்து போகட்டும். எங்கேயோ வடநாட்டிற்குப் பக்திச் சங்கத்தாருடன் போய்விட்டாள் என்கிற வதந்தியை உலாவச்செய்துவிடு.'' என்று சுபத்திராவிடம் வெகுவாய்க் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதால் அப்படியே வெளியுலகத்திற்குப் பரப்பிவிட்டார்கள்.

சுலோசனா என்கிற பெயர் மறைந்து மீனாக்ஷி என்கிற போர்வையில் புகுந்த உடனே அவளுடைய இதயத்தில் ஏதோ ஒரு மகத்தான பாரம் அழுத்திக்கொண்டு இதுகாறும் வதைசெய்து வந்த கனம் சற்று குறைந்து நிம்மதியை உண்டுபண்ணியது. தான் புதிய புனர்ஜென்மம் எடுத்தது போன்றும், இதுகாறும் ஏதோ பெரிய நரகத்திலிருந்து அவஸ்தைப்பட்டு திடீரென்று ச்வர்க்கத்திற்குச் சென்றுவிட்டதுபோன்றுமான உணர்ச்சி அவளது இதயத்தில் துளிர்த்தது.

இதற்குமுன்பு அவள் எந்தெந்த விஷயங்களைப் பரமானந்தமாக எண்ணி மகிழ்ந்தாளோ அந்த விஷயங்களை இப்போது நினைக்கவும் பிடிக்கவில்லை. அதோடு இச்சமயம் அவள் அடைகிற ஆனந்தமும் உணர்ச்சியும், பரிசுத்தமான ஓர் தனித்த இன்பத்தைக் கொடுக்கும் அபூர்வ வசிகரமும் முன்பு கண்டதாகத்தோன்றவில்லை...

பயிற்சி பெற்றதும் அவளை உடனே யுத்தம் நடக்கும் இடத்திற்கு அனுப்பினார்கள். இதே கப்பல் ப்ரயாணம் ஒரு காலத்தில் செய்த அந்த உணர்ச்சியும், இன்று த்யாக புத்தியுடன் பிறர்க்குழைத்து இன்புறுவதற்காகச் செல்லும் இந்த உணர்ச்சியும் அவளை ப்ரமிக்கச் செய்தன. இரண்டின் தாரதம்மியமும் இப்போது நன்றாக விளங்கியது.

"நான் இந்த சேவையிலீடுபட்டதன் பலன் ஒன்று வீரசொர்க்கம் கிடைக்கவேண்டும். அன்றி நானே என் தலையில் மண்ணைப்போட்டுக் கொண்டதுபோல் நானே விலக்கித் தள்ளிய கணவனின் தரிசனமாவது கிடைக்கவேண்டும். நல்லவேளையாக இந்த உத்யோகத்தின் வேஷத்தில் சடக்கென்று என்னைத் தெரிந்து கொள்ளமுடியாது. அவரை தூர இருந்தாகிலும் ஒருதரம் பார்த்துவிட்டுச் செத்தால் போதும். எந்த இறுமாப்பினால் என் மதி அழிந்ததோ, எந்த மண்டைக்கொழுப்பினால் என் கருவை நானே கொலை செய்ததோடு அந்த புண்ணிய புருஷரின் மீது பழியைச் சுமத்திக் கை துணிந்து எழுதினேனோ, எந்த கர்வத்தினால் இது போனால் மற்றொன்று பெற்றுக்கொள்ளலாம் என்று மகத்தான சோதனையின் பயங்கரத்தை யறியாது எண்ணினேனோ, அத்தகைய பாபப்பிண்டத்தை அப்புனித ஸ்வரூபனின் முன்பு கொண்டுபோவதும் கூசுமல்லவா! எங்கிருந்தாவது ஒரு முறை கண்டு களித்தால் போதும். இந்த சண்டாளிக்கிரங்கி கடவுள் அம்மாத்திரம் கருணை புரிவாரா?'' என்று தனக்குள் உருகியபடியே கப்பல் ப்ரயாணத்தை முடித்தாள்.

யுத்தத்தில் அடிப்பட்டவர்களும், உடம்பு சரியில்லாதவர்களும் படுத்துள்ள ஆஸ்பத்திரியில் நர்ஸ்வேலை செய்வதற்கே இவள் ப்ரியப்பட்டதால் அங்கு கொண்டுவிட்டார்கள். ஏற்கெனவே அங்குள்ள பெண்கள்

இவர்களை வரவேற்று மிக்க அன்புடன் உபசரித்து வேலைகளின் விவரங்களைக் கூறினர்கள்.

கால் உடைந்தும் கை உடைந்தும் மண்டையில் அடிபட்டும் முதுகு எலும்பே முறிந்தும்... அப்பப்ப... கண்டு சகிக்கமுடியாத விதம் படுத்திருக்கும் பரிதாபத்தையும், கண்ராவியையும் கண்டு மீனாக்ஷியின் உள்ளம் துடித்து எண்ணாததும் எண்ணிப் புண்ணாகியது. ஆதியில் தன் கணவன், வீதியில் சென்ற சிப்பாய்களைக் காட்டி அவர்களுடைய புனிதமான சேவையைப் பற்றியும். மகத்தான த்யாகத்தைப்பற்றியும் பேசியதை அன்று அலக்ஷியம் செய்த அதே மனுஷியா நான்? இன்று அத்தகைய த்யாகமூர்த்திகளுக்குச் சேவைசெய்வதற்காக வந்திருக்கிறேன்......ஐயோ! என் கணவருக்கு இம்மாதிரி விபத்துக்கள் ஒன்றும் வராதிருக்க வேண்டுமே! அவர் எங்கு இருக்கிறார் என்று கூடத் தெரியவில்லையே!"

என்கிற குழப்பத்துடன் அந்த ஆஸ்பத்திரியிலுள்ள சகலமான பேர்களை ஒரு முறை பார்த்து வந்தாள். அங்கு தன் கணவன் இல்லை என்பதை நிச்சயமாயறிந்தாள். பாதை தாங்காமல் துடிக்கும் அந்த வீரர்களுக்குச் சற்று பலாக்காக இருக்கும் பொருட்டு நர்ஸ்கள் நல்ல புத்தகங்கள், பத்திரிகைகள் முதலியன படித்துச் சொல்வதையும் சங்கீதம் தெரிந்தவர்கள் கேட்க விருப்பமுள்ளவர்களுக்கு இனிமையாகப் பாடி அவர்களுடைய வலியைத் தணிப்பதையும் இதமாகப் பலவிஷயங்களைப் பேசிபொழுதைப் போக்குவதையும் பார்த்த மீனாக்ஷிக்கு இந்த வேலை தனக்கு மிகவும் பிடித்திருப்பதை உணர்ந்து அன்றே வேலையிலிறங்கினாள். அவள் இதயத்திற்கு அவ்வேலை சாந்தியை கொடுத்ததாகவே எண்ணி அவள் உள்ளம் பூரித்தது.

51

"உன்னையும் நாங்கள் எங்கள் பெண்ணுக்கே பாவித்து ஆதியில் நடத்தியதற்கு உன்னால் நாங்களடைந்த பலன் இதுதானா! சுபத்திரா! நீ இத்தனை வஞ்சனைக்காரி என்று நான் நினைக்கவில்லை. எங்கள் பெண்ணை எங்களிடமிருந்து பிரித்து அவள் மனத்தை பேதித்து அவள் பணத்தையும் அபகரித்துக்கொள்வதற்கு ஒப்பாக அபகரித்துக் கொண்டு அதனால் உன் கணவன் திவான்பகதூர் பட்டம்பெற்று வாழ்வதும் தெய்வத்திற்கடுக்குமா! இது எந்த நியாயத்திலிருக்கிறது? எங்கள் வயிறெரிந்தால் நீ நன்ருக விருப்பாயா! இப்போதும் போனது போகட்டும். சுலோசனை எங்குபோயிருக்கிருள்? அதை உடனே சொல்லாவிட்டால் பிறகு விபரீதமாகத் தான் முடியும்''...

என்று சுலோசனையின் பிதா கண்கள் சிவக்க, உதடு துடிக்க ரௌத்திராகாரமான கோபத்துடன் கூறுவதை மிகவும் சாந்தத்துடன் கேட்டுவந்த சுபத்திராவுக்கு அதற்கு மேல் சற்று பொறுமை இழந்தது. "மாமா! வீணுக இப்படி வார்த்தையைக் கொட்டி யளந்துவிடாதீர்கள். காலம் போதும்; வார்த்தை நிற்கும் என்ற பழமொழியை மறக்கவேண்டாம். உங்கள் பெண்ணை நான் கெடுத்ததாக நீங்கள் கூறுவதும் ஒருவகையில் பொருந்தும். அதெப்படியெனில், அவளுடைய மலைக் குவியலைப்போன்றபாபத்தைநீங்கள் வளர்த்து அவளைப் பாழாக்கிறதைக் கண்டு கலங்கி அப் பாபத்தைப் போக்கி ஆத்ம சாந்தியும், சுத்தியும் அடையச் செய்தது குற்றந்தானே!

வெகு காலம் நீங்கள் சிரமப்பட்டுச் சேமித்து வைத்த பாபமலையை உளி கொண்டு தகர்த்தவிதத்தில் அவளைக் கெடுத்தேன். தான் உத்தமமான மானிடப் பிறவி என்பதையும் அதிலும் தான் ஒரு மகத்தான சிம்மாசனத்தில் சதி என்கிற பிருதுடன் அமர்ந்து இல்லரசு செலுத்தவேண்டியதுபோக குப்பைமேட்டில் உட்கார்ந்து நாயாய்க் குலைத்து நரியாய் ஊளையிட்டுக் காலத்தைக் கடத்திவிட்டோமே! என்கிற தத்துவத்தையும் அறியும்படிச் செய்ததும் ஒரு பெரிய குற்றம்.

மாமா! பாதகமில்லை. உங்களுக்கு நான் மிகவும் சிறியவளாதலால் நீங்கள் கோபிப்பதை நான் ஆசீர்வாதமாக ஏற்றுக்கொள்கிறேன். இருப்பினும் உங்களுக்கு இத்தனை வயதாகியும் மக்களை வளர்க்கும் முறைகூடத் தெரியாமல் அவர்களைப் பாழ்படுத்தியதையே மிக்க கவுரவமாக நினைத்துப் பேசுவதை நான்... ஏன்? உலகமே... கட்டோடு வெறுக்கிறது. மக்களுக்குச் சத்ரு மாதா பிதா என்கிற பழமொழி எந்த புண்ணியாத்மா செய்து வைத்ததோ தெரியவில்லை. தன் மக்களுக்கா ஒரு பெற்றோர் சத்ருவாகவிருக்கக்கூடும்! என்று நான் பலதரம் வியந்து நினைத்ததுண்டு. உங்களைப் போன்ற புனிதாத்மாக்களைக் கண்டுதான் இம்மாதிரி அமர வாக்கியம் போன்ற பழமொழிகளைக் கூறியிருக்கிறார்கள் என்பதை இப்போது அறிகிறேன்.

மாமா! சற்று யோசித்துப் பாருங்கள். பெற்ற பிதாவாகிய நீங்கள் கேவலம் பட்டம், பதவி மோகத்திற்கு ஆசைப்பட்டு ஒரு பெண்ணின் வாழ்க்கையை அனியாயமாகச் செய்த பயங்கரம் அப்போது தோன்றவில்லையெனினும் இப்போதாவது தோன்றுமென்று நினைக்கிறேன். அன்னியனுடன் ஆட அவள் பிரியப்பட்டாலும் தடுக்கவேண்டியது உங்கள் கடமை. அதைச் செய்தீர்களா! கணவனிடம் அவள் சரியாக நடக்காதிருப்பினும் பெற்றோர்களாகிய நீங்களிருவரும் நல்ல புத்திகளைக் கூறி பதியின் மகிமையை எடுத்துரைத்து அவளை உயர்ந்த சதி என உலகம் கொண்டாடும் வகையில் செய்திருக்கவேண்டும். எங்கே செய்தீர்கள்?...

கலங்கிய இதயத்தையே இன்னும் கலக்கிச் சேருக்கிவிட்டீர்கள். அது தான் போகிறதென்றால் ஒரு சிறு பெண் தான் முதன் முதல் தாயாகப் போகிறோம் என்கிற அபாரமான சந்தோஷத்தில் மிதப்பவளைப் பின்னும் சந்தோஷத்தை அளித்து அவள் சிறிதும் கவலையோ, துன்பமோ அடையாது சதா ஆனந்தமாயும் ஆரோக்யமாயும் இருப்பதற்காகவே கரு தரித்த நாள்முதல் கர்ப்பிணிக்கு பல தின்பண்டங்களைச் செய்து கொடுத்தும் ரவிக்கைத் தைப்பது, தலைவாரிப் பின்னி புஷ்பம் சூட்டுவது, நிலாச் சாப்பாடு வைப்பது, சீமந்தம்செய்வது, அப்பம் சமைத்து கட்டுவது முதலிய பல சடங்குகளை சாஸ்திரம், சம்பிரதாயம், சமூகப் பழக்கம் ஆகியவைகளின் பேரில் செய்து, கர்ப்பிணியின் உத்ஸாகத்திற்கு உதவிபுரிந்துவளர்ப்பதை நாம் பிரத்யக்ஷமாகக் காண்கிறோம்.

அம்மாதிரி உயர்ந்த முறையை ஆராய்ந்து அனுபவித்துச் செய்துள்ள பெரியார்களின் உன்னத லக்ஷியத்தை நினைக்காவிடினும் உங்களைப்போல் கருவை அழிப்பதற்கு... ...அப்பப்ப!... சொல்ல வாய் கூசுகிறது... உடம்பே நடுங்குகிறது. நீர் பட்டமும் பதவியும் பெறுவதற்காக ஒரு பெண்ணின்... அதி

லும் தாம்பெற்ற பெண்ணின் வாழ்க்கையை அடியோடு சிதறவடித்து அவளை உலகம் உள்ளளவும் கொலைகாரி, பதித்ரோகி, கிராதகி, சண்டாளி என்று தூற்றிச் சிரிக்கும்படிக்கு சகல விதத்திலும் செய்து நீர் பணத்தைச் சம்பாதித்துவிட்டீரே! இது அடுக்குமா...

இந்த பணத்தின் ஆசைப்ரவாகம் ஒன்றுமட்டும் உமது இதயத்தில் பொங்கி வழிந்ததேயன்றி அதைப் பின் தொடர்ந்தே பயங்கர பாபக்குன்று உம்மையும், நீர் பாழாக்கிய பெண்ணையும் விழுங்கக் காத்திருப்பதை நீர் சற்றேனும் உணர்ந்தீரா! நீர் அக்ரம வழியில் சம்பாதித்த பணத்தினால், இழந்த கண்ணியத்தையோ, அழிந்த வாழ்வின் ப்ரகாசத்தையோ மீண்டும் பெறமுடியுமா!

நிரபராதியானவளின் பேரில் கொலைக் குற்றம் பாய்ந்து உலகம் சிரிக்கும்படியான அவமானத்தை மாற்றமுடியுமா! நீரும் நானும் வேண்டுமானால் சுலோசனா நிரபராதி கற்பு விஷயத்தில் களங்கமற்றவள் என்று நம்பலாம். உலகம் அவளைப் பற்றி எப்படிப் பேசுகிறது? மகா பரிசுத்தவானாகிய ரகுவை நீங்கள் செய்த த்ரோகம் உங்கள் காலையே சுற்றியதேயன்றி அவன் இன்று இருக்கும் உன்னத ஸ்தானத்தை இனி உங்களால் சிதைக்கமுடியுமா! அல்லது ஆஹா!......ரகுநாதனின் மனைவியல்லவா அவள்...என்கிற புகழை தலைகீழாக நின்றால்தான்... அடைய முடியுமா!

இதுபோனால் இன்னொன்று பெற்றுக்கொள்ளலாம் என்று அச் சிறு பேதைப் பெண்ணின் மனத்தைக் கலைத்து ஆசைப் பேயைத் தூண்டிவிட்டு மகா பாதகக் கொலை செய்தீரே! இனி ஊசி முனையில் நின்று ஆயிரங்காலம் தவமிருந்தாலும் மறுபடியும் அவளைத் தாய்மை பீடத்தில் கம்பீரமான பெருமையுடன் ஏற்றி வைக்க முடியுமா! உம்முடைய பணத்தினால் மேலே குறித்த எந்த ஒரு குறையையாவது தீர்க்கமுடியுமா என்பதை வெகு தீவிரமாக யோசனை செய்து பாரும்.

தனது குற்றத்தின்பாரம் அழுத்துவதை மறந்து என் கணவர்மீது பழிபேச வருகிறீர்களே! இது அடுக்குமா! இதோ! உங்கள் பெண்ணின் பணத்தை இந்தியச் சிப்பாய் நிதியில் சேர்த்ததற்கு ரசீது பாரும். ராணுவ அதிகாரியின் முத்திரையைப் பாரும், என் கணவருடைய நேர்மையான முறையின் உழைப்பும், அவர் ஜனங்களின் கஷ்டமறிந்து சக்தியானுஸாரம்நிதிதிரட்டி அனுப்பிய சேவையும் அவருக்கு இந்த திவான்பகதூர் பட்டத்தை அளித்ததேயன்றி உம்முடைய பெண்ணின் சொத்தால்மட்டுமில்லை என்பதை இனியாவது அறியும்.

என் கணவர் ஊரிலில்லாததால் நான் மரியாதையாக உம்மைவிடுகிறேன். அவர் ஊரிலிருந்தால் நீர் சொல்லிய வார்த்தைக்கு உமக்கு என்ன மரியாதை நடந்திருக்கும் தெரியுமா! மூன்று மாதத்திற்கு முன்பு 5 ஆயிரம் ரூபாய் ஒரு கண்டிராக்டரிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு அவனுக்கு உடந்தையாயிருந்து பொய்க் கணக்கு எழுத தந்திரம் கற்றுக் கொடுத்து சர்க்காருக்குச் சேரவேண்டிய வரிப் பணத்தில் மண்ணைப் போட்டீரே! அந்த பயங்கரத்தை அம்பலமாக்கி உம்மை உத்யோகத்திற்கும் பட்டம் பதவிக்கும் செம்புள்ளி கரும்புள்ளி குத்தி ஊர்கோலம் செய்திருப்பார்.....நீர் செய்த பாக்யந்தான் அவர் ஊரில்லை. ஜாக்ரதை. இன்னொரு முறை இம்மாதிரி உளறியும் மிரட்டி

யும் செய்தால் இன்னும் சில தினம்
கழித்து வெளிவரப் போகும் விஷ
யம் இன்றே வெளியாகிவிடும்.
ஜாக்ரதை.

உங்களைப்போன்ற பெற்றோர்கள்
உலகில் இருப்பதைவிட இறப்பதே
மேல்...மாமா...நான் அதிகப்ரஸங்கி
யாய்ப்பேசிவிட்டதாக நினைக்கவேண்
டாம். நீரே உமது நிலைமையை
உணரவில்லையாதலால் நான்
உணர்த்தினேன்'' என்று சுபத்திரா
ஒரு பத்திரகாளியின் ஸ்வரூபமே
எடுத்ததுபோல் மூச்சுவிடாமல் சூட்
டுக்கோலால் பழுக்கக் காய்ச்சிச்
சூடுவதுபோல் பேசும் ஆவேச
வார்த்தைகளைக் கேட்டு முதலிலெல்
லாம் ஆத்திரப்பட்டுக் கொண்டும்
தக்க பதில் பேசவேண்டும் என்றும்
எண்ணியிருந்த அம்மனிதனுக்குத்
தன்னுடைய ரகஸிய லஞ்சப் புரா
ணத்தை இவள் எடுத்துரைத்ததும்
செம்மட்டியால் மண்டையில் அறை
வதுபோல் தோன்றியது. சுபத்திரா
வின் வார்த்தைகள் முடியும் வரை
யில் அங்கு அவர் நிற்கவில்லை. எப்
படி தான் அவ்விடத்தைவிட்டு
நகர்ந்து மறைந்தாரோ தெரிய
வில்லை. சுபத்திராவின் ஆவேசம்
உச்சத்தையே எட்டிவிட்டது.

அப்போதுதான் ஊரிலிருந்து
வந்த கலெக்டர் உள்ளே இந்த ப்ர
ஸங்கம்போன்ற ஆணித்தரமான
வார்த்தைகளைக் கேட்டவாறு தான்
வந்திருப்பதைத் தெரிவிக்காமல்
மறைவில் இருந்தார். வார்த்தை
முடியும்போது எதிரில் வந்து "பேஷ்
சுபத்திரா... சதி என்றால் நீயே சதி.
சரியான சவுக்கடிதான் கொடுத்
தாய். இதுகூட போதாது. இன்னும்
வேண்டும். லஞ்சப் பேயின் பலன்
அந்த அல்பனைத் தேடிக்கொண்டு
வாரண்டுமூலம் போயிருப்பதை இப்
போதே தெரிவிக்கலாமென்று பார்த்
தேன். கொலைக்கஞ்சாத கூட்டமா
யிற்றே! ஒரு வேளை விஷயத்தை
இங்கேயே அறிந்ததும் எங்கே விஷத்
தைத் தின்று உயிரை விட்டுவிடு
வானோ! அதிகாரிகளின் கையிலகப்
படும்வரையில் முன் கூட்டி விஷய
மறியக்கூடாதென்கிற முன்யோச
னையினால் மறைந்திருந்தேன்.

நாம் கண்டித்துக் கூறவேண்டி
யதைக் கூறிவிடுவோம். திருந்தினால்
திருந்தட்டும். ஒழிந்தால் ஒழியட்டும்
பிறகு உறுதி இருக்கவே இருக்
கிறது. உன் வார்த்தைகள் என்னை
ப்ரமிக்கச் செய்துவிட்டன." என்று
தனது சந்தோஷத்தைக் கூறி மனை
வியைத் தட்டிக்கொடுத்தார். சதி
பதியின் இன்பம் ஒருங்கே உச்
சத்தையடைந்தது.

52

மீனாக்ஷியின் புதிய வாழ்க்கையில்
அவளுடைய இதயம் புதிய இன்பத்
தையே கண்டு பூரித்தது. பிறர்க்குப்
பணி செய்து கிடப்பதே என் கடன்.
என்றெல்லாம் பெரியவர்கள் சொல்
லியதன் உண்மையை இப்போது
தான், நேரில் அனுபவிக்கும்போது
தான், அந்த தனிச் சிறப்பின் மகிமை
தெரிந்தது. அடிபட்டவர்களுக்கும்
மற்ற நோயாளிகளுக்கும் வெகு
அக்கரையுடன் அதில் ஒரு த்ருப்தி
யுடன் சற்றும் அஸங்கியமென்பதே
பாராமல் பூர்ண மனத்துடன் வேலை
செய்து வந்தாள்.

அடிக்கடி சுபத்ராவுக்குமட்டும்
கடிதம் எழுதுவாள். அவளிட
மிருந்துவரும் பதிலைக் கண்டு பூரிப்
பாள். அடிப்பட்டு ரத்தம் அதிகமாய்
வெளியே போய்விட்டவர்களுக்குத்
தனது ரத்தத்தைத்தானே முன்வந்து
ஏற்றச் செய்வாள். நோயின் ச்ரமம்
தெரியாதிருப்பதற்காக பாடியும்
ஆடியும் அவர்களின் இஷ்டப்படி
கதைகள் படித்தும் வெகு நல்ல

பெயர் எடுத்துவிட்டாள்.

எந்த இடத்திற்குச் சென்றாலும் நன்மையும் தீமையும் சேர்ந்தே இருப்பதுதானே உலக இயல்பு. அதேபோல் சில அல்ப புத்தியுள்ள நர்ஸ்களின் ஊழல் தாண்டவமும் நடக்காமலில்லை. அதைப் பார்த்து வெறுக்கும்போதுதான் தன்னைப் பற்றி ஆதியில் ஜனங்கள் எப்படி வெறுத்திருப்பார்கள் என்று நன்றாகப் புரியத் தொடங்கியது. அதை நினைத்துத் தானே வருந்தியும் கண்ணீர் சிந்தியும் துடிப்பாள்.

அடிபட்டுப் படுத்துக்கிடக்கும் சோல்ஜர்கள் தம்தம் மக்கள் மனைவிகளைப் பார்க்கத் துடிதுடிப்பதும் அவர்களைப்பற்றி வெகு சந்தோஷத்துடன் பேசுவதும் கேட்டு மீனாக்ஷியின் இதயம் அவளையறியாது தத்தளிக்கும், ஒரு சிப்பாயின் இரு கைகளும் அடிபட்டுக் கட்டியிருந்ததால் அவனுக்கு அன்று வந்த கடிதத்தை மீனாக்ஷியே படித்துக் காட்ட நேர்ந்தது.

"என்னுயிர் துரையே!

மழையைக் காணாத பயிர்கள் போல் நான் வாடுகிறேன். சீக்கிரமே வருவதாகச் சொல்லிச் சென்று வருஷம் மூன்று ஆகியும் இன்னும் வராதது எனக்கு மிகவும் பயமாயிருக்கிறது. யுத்தமோ மகா கொடுமையாய் நடப்பதாக பத்திரிகைகள் பறைசாற்றுகின்றன, உங்களுக்கு ஒருவிதமான விபத்தும் நேராது சந்தோஷமாய்த் திரும்பிவந்து எனக்கு மங்களத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கவேண்டி நான் ஒரு வேளை சாப்பிட்டு ஒரு வேளை விருதமிருந்து நம் கோயிலில் தினம் ப்ரதக்ஷணம் செய்கிறேன். ஒரு அதிதிக்கு தினம் அன்னமிட்டும் ஒரு சுமங்கலிக்கு தினம் வெத்திலை பாக்கு மஞ்சள் குங்குமம் கொடுத்தும் நமஸ்கரித்து ஆசி பெற்று வருகிறேன். என்னுடைய விருதம் முடிவதற்குள் தாங்கள் வந்துவிட்டால் போதும் என்று இதயம் தவிக்கிறது. ஒரு கடிதங் கூட இரண்டு மூன்று மாதமாக இல்லாததால் என் கவலை அதிகரிக்கிறது. உங்கள் திருமுகத்தை என்று காண்பேன்? உங்களுடைய பாத பூஜையை என்று செய்வேன்? நீங்கள் விரும்பிக் கேட்டு மகிழும்படி நான் என்று இனிய கானம்ருதத்தினால் உங்களை திருப்தி செய்வேன்? என்று என்னிதயம் தத்தளிக்கின்றது கடவுள் என்றுதான் நம்மீது கண் திறந்து பார்ப்பாரோ! தெரியவில்லை. தங்களுடைய க்ஷேமத்திற்கு ஒரு கடிதமாவது போடுங்கள். குழந்தை சதா அப்பா எப்போது வருவார் என்று அழுகிறான். 'நாளை வருவார்!' என்று நானும் வருஷக் கணக்காகக் கூறி நாளைக் கடத்தி வருகிறேன். பதில் கட்டாயம் போடுங்கள்.

உங்கள் நிழல்
நீலாம்பா"

இக் கடிதத்தைப் படிக்கமுடியாது மீனாக்ஷியின் தொண்டை யடைத்து துக்கமே பொங்கியது. மனைவியின் அன்பை எண்ணித் தனது கழிந்த வாழ்நாளின் நினைப்பையும் கவனிக்கும்போது அவளால் தாங்கமுடியாத துக்கம் பீறிக்கொண்டுவந்தது. அந்த சிப்பாய் அப்படியே கண்ணை மூடியவாறு கண்ணீரை ப்ரவாகமாய் விட்டான்.

இதுபோல் பல சிப்பாய்களின் மனைவிகள் எழுதும் கடிதங்களைப் படிக்க அவளுடைய இதயத்தில் காய்ந்த வேலைப் பாய்ச்சுவது போன்ற வேதனை உண்டாகியது. தன் உண்மை இன்பம் எது என்பதறியாது தன் கணவனை ஆண்டிப் பரதேசியாக்கிய கொடுமை முன்னை விட ஆயிரம் மடங்கு இப்போது

தான் நன்ருகத் தெரிந்தது. இத்த கைய சதி உலகிலிருந்ததைவிட அன்றே செத்திருக்கலாமே என்றும் தோன்றியது.

வேலைக்கு வந்து கிட்டத்தட்ட ஒரு வருஷமாகிவிட்டது. இவளுடைய ஸேவையின் திறமையை மெச்சி மற்ருெரு போர்முனையிலுள்ள ஆஸ்பத்திரிக்கு மாற்றினுர்கள். ஆகாய விமானங்களின் பலத்தபோர் நடந்ததில் பலபேர்கள் காயமடைந்தும் உயிர் துறந்தும் ஊனமாகியும் அலங்கோலமாகக் கிடப்பதைக் கண்டு குடல் நடுங்கியது.

ராணுவ வட்டாரங்களில் மிக்க விசனமாயும் குசமசவென்று பேசியும் ஏதோ சொல்வதை மெல்ல அறிய ஆவல்கொண்டு ரகஸியமாக ஒட்டுக் கேட்டாள். எதிரிகளின் விமானங்கள் பறந்து வந்ததைக் கண்டு ரகுநாத்தின் விமானப்படைகளும் கிளம்பி எதிரிகளைத் தாக்கித் த்வம்ஸம் செய்தன....வேவு பார்த்துத் திரும்பிய விமானங்களில் ரகுநாதனுடையது காணவில்லை. விமானத்துடன் எதிரிகளால் தாக்கப்பட்டுவிட்டாரோ! அன்றி எதிரிகள் கைது செய்துவிட்டார்களோ! ஒன்றுமே தெரியவில்லை. இதுதான் மிக்க குழப்பம். பரபரப்பு. ஜனங்களிடையே மகத்தான கலவரத்தை உண்டாக்கியது.

இந்த விஷயத்தைக் கேட்டவுடனே மீனுக்ஷியின் உயிர் துள்ளியது. "ஐயோ! என் இன்பதுரையை ஒருமுறை கண்ணுல் பார்க்க நான் கிடந்த தவம் வீணுகிவிட்டதா! அவரை நான் பார்க்காமலேயே போய்விடுவேனே....என்று ஏங்கித் தத்தளிக்கிருள். தான் ஒரு நர்ஸ்...தனக்கும் அவருக்கும் ஏதோ சம்பந்தம் என்று சொல்லிக் கொள்ளவும் முடியாத அத்தனை கேவலமாயிருக்கையில், தான் என்ன செய்வதென்று புரியாது அனலிடைமெழுகென உருகுகிருள்,

கடவுளை எல்லாம் வேண்டிக் கொண்டு "ஐயோ! என் அன்பருக்கு எவ்வித ஆபத்துமில்லாது காக்கவேண்டுமே! உன்னையே பஜித்த ப்ரகலாதனை நீ எத்தனைவிதமான அபாயங்களிலிருந்தும் காப்பாற்றவில்லையா! அதேபோல் அவரும் மகா பரிசுத்தரல்லவா! உன்னையே பஜிக்கும் த்யாகியல்லவா... அவருடைய உயிருக்கு ஊனமின்றிக் காப்பாற்று...என்று வேண்டிக்கொண்டு முறையிடுவதில் தனது வேலையைக்கூட மறந்தாள். அவளுக்கு இன்னது செய்வதென்றே தோன்ருது உலகமே இருண்டது.

53

பலமாக நடந்த விமானப்போரில் ரகுநாதனின் விமானமே காணப்படாத ரகஸியம் ராணுவ வட்டாரங்களில் பரவி நாலா புறங்களிலும் தேடத் தொடங்கினுர்கள். இந்த விமானத்துடன் கூடச்சென்ற விமானிக்கு நல்ல பலத்த காயம் பட்டு நினைவே அற்றிருந்ததால் அவனுலும் தகவலைத் தெரிவிக்கமுடியாத அபாய நிலையிலிருந்தான்.

எனினும் எந்த திக்கில் விமானங்கள் பறந்து சென்றனவோ அதே திக்கில் மீண்டும் பலபேர்கள் தேடிச் சென்ருர்கள். சில இடங்களில் சில விமானங்கள் எரிந்துகிடக்கும் அடையாளமும், சில விமானங்கள் உடைந்து சிதறி மனிதர்களும் சின்னபின்னமாயிருப்பதுவும் தெரிந்தன. அது அடர்ந்த புதர்காடாகையால் மனித சஞ்சாரத்திற்கே இடமில்லாத பயங்கர இடமாகக் காணப்பட்டது.

ரகுநாத் ஏறிச்சென்ற விமானத்தின் சின்னமே தெரியவில்லை. புதர்

களுக்கிடையில் ஏதோ ஒரு சத்தம் வருவது கேட்டு புதர்களை அழித்துக் கொண்டு போய் பார்க்கையில் அங்கு மிகவும் ஹீனஸ்வரத்தில் "நாராயணு! நாராயணு....'ஸ்ரீமந் நாராயணு...என்கிற பகவன் நாமம் கேட்டது. முள்ளும் மூங்கிலும் நிறைந்த புதரின் மத்தியில் அவைகளைக் களைந்துவிட்டுச் சென்று பார்க்கையில், ஒரே ரத்த வெள்ளத்தின் மத்தியில் ரகுநாத் அங்கு இருப்பதையும் தேகமாத்யந்தம் அடிபட்டுக் கிடப்பதையும் முக்கியமாக கண்ணையே திறக்கக் கூடாமல் இருப்பதையுங் கண்டு வந்தவர்கள் "ஹா....இதோ, நம் ரகுநாத்!'' என்று ஆரவாரித்தபடியே அவனருகில்போய் "எஜமான்! எஜமான்!''...என்று குரல்காட்டி அவனைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்தார்கள்.

ரகுநாதனுக்குக் குரலிலிருந்து வந்திருப்பது தன் படையைச் சேர்ந்த ஆட்கள்தான் என்று தெரிந்தது. ஆனல் கண்திறந்து பார்க்க முடியவில்லை. உடனே அவனை ஜாக்ரதையாக எடுத்துக்கொண்டு மிகவும் அருகிலுள்ள ராணுவ ஆஸ்பத்திரியில் கொண்டுவிட்டார்கள். பயங்கரமாக அடிபட்டிருப்பதையும், முக்யமாய் கண்களில் குண்டு வீச்சின் அதிர்ச்சி தாக்கிக் கோளாருகி ரணமாகிவிட்டதையுங் கண்டு பெரிய டாக்டர்களே நடுநடுங்கினர்கள்.

பல பெரிய டாக்டர்கள் ஒன்று கூடி அவனுக்கான சிகித்ஸைகளைச் செய்து தனி யறையில் அவர்களின் கண்பார்வையில் கிடத்தினர்கள். "எனது விமானப்படை சென்று தாக்குதல் நடத்திய பிறகு சில விமானங்கள் திரும்பி வாராததால் நான் அதனைப் பார்வையிட மற்ருெரு விமானத்தில் சென்றேன். அப்போது திடீரென்று எதிரியின் குண்டு என் விமானத்தில் தாக்கியதோடு ஏதோ விஷக்காற்று புஸ்ஸென்று பரவி என்னிலை கலக்கச் செய்து விமானத்துடன் சிதற வடித்துவிட்டது. புதரில் தள்ளியது கூட எனக்குத் தெரியவில்லை'' என்று வெகு ஹீனஸ்வரத்தில் ரகு சொல்லியதைக் கேட்டு வியந்தார்கள்.

'ரகு அகப்பட்டுவிட்டான்' என்கிற செய்தி ராணுவவட்டாரம் பூராவும் பரவி ஆஸ்பத்திரியிலும் காற்று போல் பரவியது. மீனுக்ஷியின் துடிதுடிப்பிற்கு மத்தியில் "ரகு கிடைத்துவிட்டார்; ஆனல் உயிர் ஊசல் தான் ஆடுகிறது. பிழைப்பது ஈசன் செயல்.'' என்று கேட்டதும், அவளையறியாத சித்திரவதை செய்து அவள் இதயத்தைப் பிளந்தது.

"என் நாயகன் முகத்தில் நான் எப்படி விழிப்பது?...எனக்கு அவர் எதிரில் செல்ல யோக்யதையுண்டா...ஐயோ! அதை நாமே போக்கிக்கொண்டோமே......அவர் என்னைப் பார்த்தால் அடையாளம் புரியா விடினும் நாளடைவில் புரிந்து கொண்டால் அந்த அதிர்ச்சியில் உயிர் போய்விட்டால் என்ன செய்வது...ஹா...கடவுளே...என் ப்ராணபதியின் உயிர்ப்பிச்சையும் எனக்கு மங்கள வாழ்வும் கொடுத்தருள். சோதித்ததெல்லாம் போதும். இனியும் சோதிக்காதே''

என்று தன்போக்காகத் துடிதுடித்தவாறு, அவனை விட்டிருந்த அறைப்பக்கம் சென்று தேகமே நடுநடுங்க எட்டிப்பார்த்தாள். கால் முதல் தலைவரையில் கட்டுகள் கட்டியிருந்தன. பெரிய டாக்டர் கவலை தோய்ந்த முகத்துடன் நிமிடத்திற்கு நிமிடம் மருந்துகொடுத்தும் ஊசி

பிரயோகித்தும் வருகிறார்.

ரகுநாத்திற்கு மயக்கமாகவே இருப்பதற்காக மருந்து கொடுத்திருந்ததால் மயங்கிக் கிடந்தான். தூரவிருந்து அவனைப் பார்த்ததும் மீனாக்ஷிக்கு எங்குமில்லாத துக்கம் பீறிக்கொண்டுவந்தது. மகா கொடும் பாவியாகிய தன்னால்தானே இந்த மகானுபாவனுக்கு இந்த கதி உண்டாகியது என்பதை நினைக்க அவளால் அடக்கமுடியாத துக்கம் பிளந்துகொண்டு வந்ததும். தனியறையில் சென்று தன்னுடைய மனப்புயல் அடங்குமட்டும் கதறினாள். முட்டிக்கொண்டாள். எது செய்து என்ன பயன்?

ரகு படுத்திருக்கும் வார்டுக்கு இவள் போகும் முறை இன்னும் இரண்டு நாட்கள்தானிருக்கின்றன. "அப்போது நாம் அந்த இடத்திற்குப் போய்தானே தீரவேண்டும், அதற்குள் ஒரு வேளை அவர்......சீச்சீ! நினைக்கவும் பயமாயிருக்கிறது. அதற்குள் நாமே தற்கொலைசெய்துகொண்டு விடுவோம்...

ஏன்...செய்த பாபங்கள் போதாமல் இதுவும் வேறு செய்யவேண்டுமா! தைரியமாக அவருக்குத் தொண்டுசெய்து ஒரு கடுகளவு பாபத்தையாவது குறைத்துக்கொண்டு அவரறியாதவாறு நடப்போம். ஒருவேளை அவருக்கு ஏதாவது விபத்து வந்துவிட்டால் பண்டையகாலத்து சதியைப்போல் துணிந்து அவருடைய ஜ்வாலையில் தைரியமாகக் கலந்து எரிந்து உலகிற்கு நிரூபித்துவிடுவோம். ஒருவேளை...அவர் பிழைத்தால்..என்னை ஏற்றுக்கொண்டால், என் பாக்யமென்று எண்ணுகிறேன். விலக்கினாலும் என் செய்கைக்கான சரியான தண்டனை என்று துணிகிறேன். இவ்வளவுதானே. உரலில் தலையை விட்ட பிறகு உலக்கைக்குப் பயப்பட்டால் முடியுமா!"

என்று தன்போக்காக எண்ணியவாறு மீண்டும் அந்த பக்கம் சென்றாள். பெரிய டாக்டர் அங்கு தனியாகச் செல்வதைக்கண்டு, தான் ஒன்றுமே யறியாததுபோல் நடித்து 'டாக்டர்! குட்மார்னிங்கு...யாரங்கு அடி பட்டது? சோல்ஜரா?...என்று தானாகக் கேட்டாள்.

பெரிய டாக்டர்:—உன்னைக் கூப்பிடத்தான் வந்தேன். அவர் சாதாரண சோல்ஜரல்ல. பெரிய லெப்டனென்ட்கர்னல். அவருக்காக சற்றும் சோம்பலோ, சலிப்போ இல்லாது உழைக்க ஒரு முதல்தர நர்ஸ் தேவை. அதற்கு உன்னை அழைத்துப் போகவே வந்தேன். நிலைமை மிகவும் அபாயகரமாக இருக்கிறது.

மீனா:—(துடிதுடித்ததை மெல்ல அடக்கிக்கொண்டு) அபாயகரமா?... பிழைக்கமாட்டாரா...

டாக்டர்:—அதைச்சொல்ல நான் என்ன கடவுளா! பிழைப்பதையும் பிழைக்காததையும் நாளை போனால்தான் சொல்லமுடியும். பிழைத்தாலும் கண்கள்...

மீனா:—ஹா...என்ன!...டாக்டர் கண்களுக்கு என்ன...

டாக்:—அதுதான் சந்தேகம்... உயிர் மீண்டாலும் பார்வை மீளுமா என்பதுதான் சொல்லமுடியாது. எதிரிகளின் விஷப்புகை கண்களில் பலமாகத் தாக்கிவிட்டது...பாவம்! நல்ல மனிதன். வெகு உத்தமன். பரமயோக்யன். வாழ்க்கையில் மிகவும் துன்பப்பட்டவன் என்று தெரிகிறது. அவனுடன் பழகிய மற்றொருவர் 'குடும்பத்தில் மனம் வெதும்பிப்போய் வைராக்யம் அடைந்து உயிரையே வெறுத்து வந்த வீரனுக்கு இப்படியா விபத்து வரவேண்டும்?' என்று இத்தனை நாழி

வருந்தினர் பாவம்!... சரி... சரி... நீ இந்த மனிதனிடமே கவனித்துக் கொண்டிரு. நான் போய் பென்ஸி லின் கொண்டுவருகிறேன்'' என்று கூறிக்கொண்டே போய்விட்டார்.

"என்னே சோதனை! நான்தான் இந்த மனிதனின் வாழ்க்கையை நாசமாக்கிய சண்டாளி என்பதை யறிந்தால் இந்த டாக்டர் என் முகத் தில் காறியல்லவா துப்பியிருப்பார்? ஐயோ! கண்களுக்கு ஒருவிதமான பழுதும் இல்லாதிருக்கவேண்டுமே!'' என்று கண்ணீர் வழிய கடவுளை வணங்கியபடி ரகுவின் அறை யில் ப்ரவேசித்தாள். கால்கள் நடுங்கி தேகமே பதைக்கிறது. இத யத்தின் வேகம் சொல்லிமுடியாது. அத்தகைய உணர்ச்சியுடன் கட்டில ருகில் சென்று நின்றாள். அவளு டைய நிலைமை எப்படித்தானிருக் கும் என்பதை சொல்லில்... எழுத் தில்... குறிப்பிடமுடியுமா! ஊகித்தறி வதே நல்லது.

54

"என்ன! என்ன! என்னால் நம் பவே முடியவில்லையே! இன்னொரு தரம் கடிதத்தைப் படியுங்கள்''... என்று சுபத்திரா ஆர்வத்துடன் தன்கணவனை நோக்கிக் கேட்டாள். கலெக்டர் மீண்டும் கடிதத்தைப் படிக்கவாரம்பித்தார்.

"என்னுருயிர் சுபத்திராவுக்கு,

என்னால் கடிதம் எழுதக்கூட முடியவில்லை. நீ செய்துள்ள மகத் தான சகாயத்திற்கு நான் ஏழேழு ஜென்மமெடுத்தாலும் ஈடுசெய்ய முடியாது. இந்த யுத்த ஸேவையின் நிமித்தம் என் வாழ்வு பாவனம் அடைந்தது. பழைய அழுக்காறு ஒழிந்தது. நான் எந்த லக்ஷியத்தை எதிர்பார்த்து இவ்வேலைக்கு வந் தேனோ அந்த லக்ஷிய தேவதையின் கிருபைக்குப் பாத்திரமாகி இப் போது பணிசெய்து வருகிறேன். என்னிதயத்தின் கொந்தளிப்பை நீ அறிந்து புரிந்துகொண்டிருப்பாய் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு
மீனாக்ஷி.''

என்பதைப் படித்த கலெக்டர் சிரித்துக்கொண்டே "என்ன சுபத் திரா! புரிந்துகொண்டாயா?'' என்றார்.

"ஆம். நன்றாகப் புரிந்துகொண் டேன். ரா ணுவ ர க ஸி ய ங் க ளை வெளியிடக்கூடாதாகையால் பூடக மாக எழுதி தனது லக்ஷ்யம் ஈடேறி விட்டதாகக் குறிப்பிட்டிருப்பதிலி ருந்து அவள் ரகுவைச் சந்தித்திருப் பதாகத் தெரிகிறது. அவ்வளவுதான் வேண்டியது. இனியாவது புத்தியு டன் வாழ்ந்தால் போதும்'' என்று நிறைந்த மனத்துடன் கூறினாள். உடனே தனது சந்தோஷத்தைத் தானும் பூடகமாய் அறிவித்து ஒரு கடிதம் மீனாக்ஷிக்கு எழுதினாள்.

மீனாக்ஷி டாக்டரால் அனுப்பப்பட் டதும் உள்ளே சென்றாள். கண்ணீர் வெள்ளத்தையும் உடல் நடுக்கத்தை யும் அவளால் தடுக்கவே முடிய வில்லை. உடனே, முகத்தில் பலமான கட்டு கட்டியிருப்பதால் தன்னைப் பார்க்கமுடியாது என்கிற நம்பிக்கை பூர்ணமாக உண்டாகியது.

ரகுவின் காலடிக்குச் சென்று அவன் கால்களை அப்படியே பிடித் துத் தன் தலையிலும் கண்களிலும் ஒத்திக்கொண்டு சில வி நா டி க ள் மெய்மறந்தாள். "மகா பாவியாகிய நான் இம்மகானுபாவனைத் தீண்ட வும்யோக்யதையுண்டா! பரிசுத்தாத் மாவை பாவங்கள்தோய்ந்த கையால் தீண்டிவிட்டோமே! இதை அவரறிந் தால் என்ன நினைப்பார்?'' என்று சற்றுதியங்கினாள். "நினைப்பதென்ன இருக்கிறது? நான் கொலைகாரி என் பதையும் பதித்ரோகி என்பதையும்

இனி மறைக்கமுடியுமா! அவரறிபாதிருக்கும்பொழுது சேவையாவது செய்து இன்புறுவோம். இதைத் தவிர இனி வேறு ஒன்றுமில்லை. என் பணத்தினால் நான் உலகையே புரட்டிவிடலாம் என்று நினைத்த இறுமாப்புஒழிந்தது. ஆத்ம சுத்தியினலேதான் ஆத்ம சாந்தியையும் அடையமுடியும். ஆத்ம சாந்தியடைய அறநெறி பிறழாத ஒழுக்கத்துடன் கூடிய உழைப்புதான் முக்யம். உழைப்பினல் இந்த பேரின்பம் கிடைத்ததும் என் பாக்யம்"...

என்று தனக்குள்பலவாறுகூறிப் பிதற்றியவாறு ரகுவின் கால்களை மீண்டும் மீண்டும் கண்ணில் ஒத்திக் கொண்டாள். வெகு சிறந்த டாக்டர்களின் திறமையான ஸிகிச்சையினல் இரண்டு மூன்று நாட்களில் ரகு மீண்டும் நினைவு பெற்றான். பழய விமான விபத்தே இவன் இதயத்தில் வேலை செய்ததால் "ஹா... எதிரியின் விமானம்.... விசையை அழுத்துங்கள்....அபாயச் சங்கை ஊதுங்கள்...நான் விமானத்துடன் விழுந்துவிடவில்லையா...ஐயையோ! இதென்ன இருட்டு......கண்ணே தெரியவில்லையே! கையும் அசைக்க முடியவில்லையே......என் கண்கள் போய்விட்டதா?"...என்று கூச்சலிட்டான்.

பெரிய டாக்டர்:-ரகுநாத்! சற்று சாந்தியடையுங்கள். பகவான் உமக்கு உயிரை அளித்ததுபோல் கண்ணையும் அளிக்கும்படி அவனை ப்ரார்த்தனை செய்யுங்கள். அபாயச் சங்கும் விசையழுத்தலும் உமக்கு வேண்டாம். இந்த நிலைமையில்உமக்குச் சற்றும் அதிர்ச்சியே கூடாது. மவுனமாயிரும்...அல்லது யுத்த விஷயம் தவிர வேறு பேசும் ரேடியோ வைக்கட்டுமா.....க்ராமபோன் வைக்கட்டுமா.....அன்றி யாரையாவது பாடச் சொல்லட்டுமா...கதை கேட்கிறீரா...இதோ நர்ஸ் மீனாக்ஷி உமக்குத் தக்க பணிவிடைகள் செய்வாள். நீர்மட்டும் அதிகம் அலட்டிக் கொள்ளக்கூடாது." என்று சமாதானம் செய்தார்.

இதைக் கேட்ட சுத்த வீரனின் உள்ளம் புழுங்கியது..."ஐயோ டாக்டர்! என் கண்கள் போய்விட்டதா ...வாழ்க்கையில் வந்து கப்பிக் கொண்ட இருள்,கண்களையும் அதற்குப் பலியாகக் கொண்டுபோய் ஒரே அந்தகாரமாக்கிவிட்டதா?... கண்ணற்ற கபோதியா நான்...... ஐயையோ..என்னுயிர் போயிருந்தாலும் நான் சந்தோஷப்பட்டிருப்பேனே...கண்ணு போய்விட்டது!" என்று கதறினன்.

மீனாக்ஷியின் இதயத்தில் எரிமலையே புரண்டுவிட்டதுபோல் வேதனை செய்கிறது, தனது கடமையில் தவறுமலிருக்கும் பொருட்டு ப்ரயாஸை செய்து தன்னை சமாதானப்படுத்திக்கொண்டு "ஐயா! இதோ ரேடியோவைத் திருப்புகிறேன்"...என்று தன் குரலை மாற்றிக்கொண்டே கூறியவாறு திருப்பினள். விதிவசத்தினல் அதில் சொல்லவல்லாயோ கிளியே! என்று ஆரம்பித்ததும் ரகு "ஹா...ராம ராமா...என்று அலறியவாறு...... "ஐயோ! ரேடியோ வேண்டாம்... என்னை பகவான் சோதித்ததெல்லாம் போதும். இந்த பாட்டை முதலில் நிறுத்து...நர்ஸ்...நர்ஸ்... இந்த நாராசப் பாட்டு எனக்கு வேண்டாம் வேண்டாம்" என்று கத்தியதும் மீனாக்ஷி சடக்கென்று ரேடியோவை நிறுத்தினள்.

இந்தப் பாட்டின் ஆதி சரிதை அவள் நினைவிலும் வேல் பாய்வது போல் பாய்ந்ததால் அவளைச் சித்திர வதை செய்தது. மெல்ல சமாளித்

துக்கொண்டு, அவள் உடல் நடுங்கு வதை மெல்லக் கையால் அமர்த்திய வாறு "சார்! உங்களுக்கு என்ன வேண்டும்?...ஏன் இப்பாட்டு உங்களுக்குப் பிடிக்கவில்லை?"...என்று தானே வார்த்தையை விட்டாள்.

"நர்ஸ்!...மன்னிக்கவேண்டும். இவைகளைப் பற்றிக் கேட்கவேண்டாம். எனக்கு வேண்டுவது வீர சொர்க்கம். அது இப்போது கட்டாயம் கிடைத்துவிடும் என்றுதான் அன்று விமான அபாயத்தின்போது நினைத்தேன், ஆனால்...என்னுடைய விதி என்னை வேறுவிதமாக மாற்றி விட்டது. உயிருக்குப் பதில் கண்களைக் கொண்டுபோய்விட்டது." என்று கூறிப் புலம்பிவிட்டான். அதற்குமேல் எதுவும் பேசமுடியாது மீனாக்ஷியும் மவுனம் சாதித்தாள்.

55

நாட்கள் ஒன்றிரண்டெனக் கடந்து மூன்று வாரங்களாகிவிட்டன. ரகுவின் உயிருக்குப்பயமில்லை என்கிற நிச்சயமான நம்பிக்கை உண்டாகிவிட்டது. ஆனால் அவனுடைய கண்களின் ஒளியைப்பற்றிய நம்பிக்கை குறைந்துவிட்டது. "இத்தனை கெட்டிக்காரனின் உதவி இராணுவத்திற்கு இல்லாது போய்விடப் போகிறதே!" என்கிற கவலையும் ஏக்கமும் ராணுவ அதிகாரிகளுக்கு மிகவும் பாதித்தன.

உள்மர்மம், பகவானுக்கும் மீனாக்ஷிக்கு மின்றி பிறர் எங்ஙன மறியக்கூடும்? மீனாக்ஷியின் சிச்ருஷையில் பெரிய டாக்டர் முதல் சகலரும் வியந்தார்கள். ரகுநாதனின் இருண்ட உலகில் மீனாக்ஷியின் உபசாரம் ஒரு சிறிது ப்ரகாசத்தைக் கொடுத்தது. மீனாக்ஷியின் மதுரமான வசனங்கள் பூராவும் வைராக்யமும் விரக்தியும் நிறைந்தனவாகவே காணப்பட்டதால் அந்த அம்சத்தில் ரகு மிகவும் திருப்தியடைந்தான்.

"நர்ஸ்! இன்று என்ன தேதி?" என்றான். "இன்று! நவம்பர் 15-ந் தேதி" என்றாள். அதே 15-ம் தேதியன்று தான் ரகு கப்பலேறியதும் அன்றைய சம்பவமும் உடனே அவன் மனக்கண்முன்பு தோன்றியதும் அவனைமீறி 'ஹா!'..என்றுவாய்விட்டுக் கூவிவிட்டான். மீனாக்ஷிக்கும் தான் கப்பலேறியதும் அதே தேதி என்பது நினைவில் வராமலில்லை. இருவருடைய மனத்திலும் அந்த உணர்ச்சி பெரும் யுத்தம் செய்தது. கண்களில் பலமான கட்டுகள் இருப்பதால் பெருமூச்சின் குமுறலில் அவன் இதயத்துடிப்பை யறிந்து மீனாக்ஷியின் தலை சுற்றியது.

தன்னை இன்னாரென்று அறியாமலேயே பேசும் ரகுவின் உள் அந்தரங்கத்தை எப்படியாவது அறிய வேண்டும். மனைவியைப் பற்றி அவன் எப்படி அபிப்ராயப்படுகிறான் என்பதைத் தெரிந்தால் போதும் என்று தோன்றியதால் ஜாடை மாடையாகப் பேச்சை எதிர்பார்த்திருந்தாள்.

இந்த தேதியை ஒரு வ்யாஜமாகக் கொண்டு, "ஸார்! ஏன் இன்றைய தேதியைக் கேட்ட உடனே உங்களுக்கு இத்தகைய துயரம் பொங்குகிறது? உங்கள் மனைவியிடமிருந்து கடிதம் ஒன்றுமே வராததால் விசனமா! அல்லது இந்த தேதியில் உங்கள் வாழ்க்கையில் ஏதாவது விபரீதம் நடந்ததா?" என்று மெல்லக் கேட்டாள்.

ரகுவின் தேகமே சற்று கிடுகிடுத்தது "உம்...மனைவியிடமிருந்து கடிதமா!...நர்ஸ்...நீ ஏதோ வைராக்யப் பதுமையாகக் காணப்படுவதால் உன்னிடம் நான் பேசுகிறேனேயன்றி சாதாரணப் பெண்ணாக

திருந்தால் உன்னிடம் நான் வேலையே வாங்கிக்கொண்டிருக்க மாட்டேன். என் வாழ்நாளின் பயங்கரத்தை எண்ணினால் நான் என்றோ இறந்திருக்கவேண்டும். ஆனால் எனது சேவையே என்னைப் புனர் ஜென்மமெடுக்கச் செய்தது. நான் ஒருசன்யாசி.எனக்கு மக்கள்மனைவி யாருமில்லை. ஆகாயம் போட்டது; பூமி ஏந்தியது என்கிற பழமொழிப்படிக்கு நான் ஒரு ஜீவனாகவிருக்கிறேன் என்றதுமட்டுந்தான் சொல்ல முடியும்.''

மீனாக்ஷியின் இதயத்தில் வாள் கொண்டறுப்பதுபோன்று வதைக்கிறது. அதைச் சமாளித்துக் கொண்டு "ஸார்! ஒரு மனிதரின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி பிறர் விசாரிப்பது மிகவும் குற்றந்தான். அது அநாகரீகமானதுகூடத் தான் என்பதையும் நான் அறிவேன். உலகத்தில் பிறந்த எந்த மக்களும் பிறவியிலேயே வைராக்யப் பதுமைகளாகி விடுவது என்பது இல்லவே இல்லை. அப்பேர்ப்பட்ட விச்வாமித்திர முனிவர் முதல் உலகபந்தத்தினால் தவமே இழக்கும் போது, சாதாரண மனிதர்களைக் கர்மா பாதிக்காமலிருக்கமுடியாது ஆனால் வாழ்க்கையில் மிகமிக பயங்கரமான சம்பவம் ஒன்று தோன்றி சிலருடைய வாழ்வைப் பாழ்படுத்தி விடுவதும் உலகில் உண்டு. அந்த வேகத்தில்தான் சிலர் நல்வழியிலேயே திருந்துகிறார்கள். சிலர் தீய வழியில் பாய்ந்து மாள்கிறார்கள். தங்களுடைய வாழ்க்கையிலும் இதேபோன்ற ஒரு சோதனைச் சம்பவம் ஏதோ நடந்திருக்கவேண்டும் என்பதை உங்களுடைய ஒவ்வொரு பெருமூச்சும் எனக்கு விளக்கிக் காட்டுகிறது. ஆகையால்தான் நான் அதை அறிய மிகவும் ஆவலுள்ளவளாக விருக்கிறேன்.

மேலும், நான் ஒரு சித்திரம் வரையும் பித்துக்கொண்டவள். உள்ளது உள்ளபடியே உணர்ச்சி பாவங்களை அமைத்துச் சித்திரம் எழுத ஆசை. அதனால்தான் கேட்கிறேன்'' என்றாள்.

ரகு இதற்கு பதில் சொல்லவே இல்லை. எத்தனையோ ப்ரயாஸைப் பட்டுத் தனது பரிதாப சரிதையை மறக்க எண்ணி, பாதி மறந்தும் இருக்கும் சமயம் இதைக் கிளறிவிடுவதுபோல் இம்மாதிரி கேட்பதால் அவனுடைய துக்கம் கரை புரண்டது. சற்று நேரம் சென்றபிறகு "நர்ஸ்!...என்னை வீணாகக் கலக்கக் கடலில் பின்னும் புரட்டாதே. நிராசை என்று ஒரு சித்திரத்தை, நீ கல்பனா உலகில் சஞ்சரித்து அதில் உணர்ச்சி வெள்ளத்தைக் கண்டு அந்த பிம்பங்களைத் தயார் செய்து சித்திர உருவமாக்கு. அது போதும். இந்த சன்யாசிக் கட்டையை நீ எதுவும் கேட்காதே...எனக்குத் தலை சுழற்றுகிறது. என்னைத் தனிமையில் விட்டு விட்டுச் சென்றுவிடு'' என்றான்.

அதற்குமேல் மீனாக்ஷியினால் எதுவும் பேசமுடியாது தவித்தாள். அன்று மேலாக ஒன்றும் கேட்கக் கூடாதென்று விட்டுவிட்டாள். பின்னும் இரண்டு தினங்கள் கடந்தன.

ரகு:—நர்ஸ்!......என்னை நீ ஏதேதோ கேள்விகள் கேட்கிறாயே! உன் வார்த்தைகளிலும் செய்கைகளிலும் வைராக்யம் தோய்ந்திருக்கக் காரணம் என்ன என்று நான் கேட்கலாமா... நீ விவாகமாகியவளா! ஆகாதவளா?

மீனாக்ஷியை இக் கேள்வி தூக்கி வாரிப்போட்டது. மெல்ல சமாளித்துக்கொண்டு....."ஸார்!.....தாராளமாய்க் கேளுங்கள். நானும் உங்

களைப்போல் ஒரு சன்யாசி.

ரகு:—என்ன! சன்யாசினியா... கல்யாணமான பிறகா! முன்பா!...

மீனாக்ஷி:—கல்யாணமே ஆக வில்லை. என் வாழ்நாளில் வைராக் யத்தை உண்டு பண்ணினது என்னுடைய பாலிய சினேகிதை யொருத்திதான்.

ரகு:— பால்ய சினேகிதையா! ஏன்! நீ காதலித்தவனை அவள் மணந்துவிட்டாளா?

மீனாக்ஷி:—இல்லை; இல்லை. என் சினேகிதையும் நானும் ஒன்ருகப் படித்தோம். ஒன்ருக நாட்டியம் கற்றுக் கொண்டோம். நாட்டிய அரசி சுலோசனு என்ருல் உலகமே கொண்டாடும்.

"ஹா...ஐயோ!.....வேண்டாம்! வேண்டாம்! நர்ஸ்...அந்தக் கொலைப் பாதகியைப் பற்றி என்னெதிரில் பேசவேண்டாம்.....அடாடாடா..... விதியின் விளையாட்டா இது! அக் கொலைப் பாதகியின் சினேகிதை நீ என்று தெரிந்திருந்தால் நான் இந்த உள்ளே காலடிகூட எடுத்துவைக் கச்சொல்லியிருக்கமாட்டேன். அந்த மகா பாவியினுல்தான் என் வாழ்வு அழிந்தது. என் ஆசைகள் மடிந்தன. என் பிறவியே மகத்தான சோத னைக்குள்ளாகிவிட்டது...... அம்மா! தாயே!...தயவு செய்து நீ வெளியே போய் விடு...போய் விடு"...என்று ரகு கத்தினுன்.

மீனாக்ஷியின் நிலைமை அப்போது எப்படித்தானிருக்கும்! தான் எந்த மர்மத்தை அறிய நினைத்தாளோ, அதை ஒரு விநாடியிலறிந்தாயிற்று. இனிமேல் என்ன செய்வது? அந்தப் பாதகியின் சினேகிதைகளைக் கூட வெறுக்கும்படிக்குச் செய்த பிறகு இனி... இனி... இவர்முன்பு தோன்று வதா...ஐயோ!" என்று கண்ணீர் விட்டவாறு தலையை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டாள். உடனே ஒரு யோசனை தோன்றியது.

"சார்! அவசரப்படாதீர்கள். நான் அப்பாதகியின் ஊழலையறிந்த பிறகு அவளை அறவே துறந்துவிட்டேன். அத்தகைய சண்டாளியுடன் சினே கம் செய்ததற்காக ப்ராயச்சித்தம் என்னையே நான் சன்யாசியாக்கிக் கொண்டேன். அவளுக்கும் எனக் கும் இப்போது ஸ்நான ப்ராப்திகூட கிடையாது. அவள் உலகைவிட்டே மறைந்துவிட்டாள் அவள் இறந்து போய்...

என்று முடிப்பதற்குள்..."ஹா... இறந்துவிட்டாளா! சுலோசனுவா... சீச்சீ......பெயரைப் பாரு...கருக் கொலை செய்த பாதகி இறந்துவிட் டாளா! கட்டிய கணவனை த்ரோகம் செய்த சண்டாளியா இறந்தாள். அபாடா....பூபாரம் துலைந்ததா.... இந்தக் கரு அழிந்தால் இன்னென்று பெற்றுக் கொள்ளலாம் என்று கூறிக் கருவழித்த பாதகி மறுபடி யும் பெற்றுக் குலாவாமலா போய் விட்டாள்?...

நர்ஸ்...நர்ஸ்...இந்த விஷயம் நிஜந்தானு...அன்றி ஏதோ எனக்கு எதையாவது சொல்லவேண்டுமே என்று சொல்கிருயா?......என்று பதறப் பதறக் கேட்டான்...மீனுக்ஷி யின் சரீரத்தில் ஆயிரக் கணக்கான தேளும் பாம்பும் கடித்தால்கூட அத்தனை வேதனை செய்யாது. அப் படி சித்திரவதை செய்கிறது. அதை சமாளித்துக்கொண்டு..."சார்! நான் பொய் சொல்லவில்லை. அவள் சத் தியமாக இறந்துவிட்டாள். அவள் இறக்கும்போது தான் செய்த மகத் தான குற்றங்களை எண்ணி உயிர் துடித்தாள். தான் செய்த தவறை உணர்ந்த பிறகே செத்தாள்...அவள் சத்தியமாகச் செத்துவிட்டாள் என் பது எனக்குத் தெரியும். அவளு

டைய கணவன் தாங்கள்தான் என் பதை அறிய நான் வெகு வெகு துக்கப்படுகிறேன்...'என் கணவன் மன்னிப்பாரா?...மன்னிப்பாரா?'... என்று கதறினளாம்...

ரகு :—நர்ஸ்!.....மன்னிப்பதா.... அவளைப் படைத்த பகவானுல்கூட மன்னிக்கப்படும் யோக்யதையற்ற வளை மனிதர்கள் மன்னிப்பதாவது? ஆஹா! நீ சொல்வது உண்மையாக விருந்தால் என்னிதயம் ஆனந்தத்தால் பூரிக்கிறது. அமுதமயமாய்ப் பொங்குகிறது. நல்லவர்களாயிருந்து உலகில் உதாரணப் பெண்மணிகளாய்த் திகழ்ந்தவர்கள் இறந்தால் உலகமே கண்ணீர்விட்டுக் கதறுகிறதேபோல் கெட்டவர்கள் இறந்தால் உலகமே கொண்டாடுகிறது. அதேபோல் பெண்களின் இனத்திற்கே பெரும் அவமானத்தையும் இழுக்கையும் தேடிவைத்து அழியாத நிலையில் சாச்வதமாய் கல்லின் மேல் எழுத்திற்கு நிகராகச் செய்துகொண்ட மகா பாவி உலகத்தை விட்டு மறைந்த நாளை—ஆகா! நரகாஸுரனைக் கொன்ற நாளை தீபாவளியாயும், மகாபலிக்கு மோக்ஷங் கொடுத்த நாளை கார்த்திகைப் பண்டிகையாயும் இதுபோல் பல துஷ்டர்களை ஒழித்த நாளைச் சிறப்புடன் கொண்டாடுவதுபோல்— இந்த பாதகி ஒழிந்த நாளையும் கொண்டாடி இந்த கதையை உலகத்தாருக்கறிவித்து ''அவளைப்போல் பாழாகிவிடாதீர்கள். அப்பாவியின் சரிதையைப் பாடமாகக்கொண்டு புனிதவழியில் வாழுங்கள்'' என்று உபதேசம் செய்யலாம். அப்பாடா!... பூபாரமாய், மானமிழந்த நாயாய் வாழ்ந்த சனி துலைந்தது. இனி என் தாய்நாட்டிற்குச் சென்று என்னை ஆசையோடு வளர்த்த என் முன்னறி தெய்வங்களை நமஸ்கரிப்பேன். கருணையங்கடலே! ஆபாஸப் பிண்டத்துடன் அல்ப நாழிகை மனைவி என்று வாழ்ந்ததற்காக என் கண்களைப் பறித்துவிட்டாயா?.....என் முன்னறி தெய்வங்களைக் கண்ணுரக் கண்டு வணங்குவதற்கு ஒரு நாளாவது பார்வை கொடுத்து, மறுபடியும் வேண்டுமானல் பிடுங்கிக்கொள்ளு...

தாய்நாடு சென்றல் அப் பாதகியை எங்கே பார்க்க நேர்ந்துவிடுமோ, எங்கே அந்த அல்பப் பேயைப்பற்றிய விஷயங்கள் காதில் விழுந்துவிடுமோ! என்ற ஒரே எண்ணத்தினுல் இது பரியந்தம் நான் என் தாய்நாட்டின்மீது உயிராயிருந்தும் போகாதிருந்தேன்...நர்ஸ்!... எனக்குக் கண்கள் நன்ருகக் குணமாகவேண்டும் என்று நீயும் பகவானை ஸ்தோத்திரம் செய்...சினேகிதையின் ஊழலுக்காக த்யாகம் செய்த மகா பரிசுத்தவதியான உன்னை ஒருமுறை கண்ணுல் பார்க்க வேண்டி இப்போதுதான் என் மனது தவிக்கிறது. எங்கே! உன் பவித்திரமான இதயத்துடன் பகவானை வேண்டிக்கொள்ளு'' என்று பித்தன்போல் பிதற்றி அவன் இதயத்தை அழுத்திய பாரங்களை எல்லாம் கொட்டியளந்தான்.

இவைகளைக் கேட்டதும் மீனுக்ஷியின் உயிர் ஊசலாடுகிறது. மரணவஸ்தை என்பதை இனி அனுபவிக்க வேண்டாம். அப்படியே துவண்டு விழுந்துவிடுபவள் போன்று தோன்றியதால் நெஞ்சை யடைக்கும் துக்கத்துடன் ரகுவையே உற்று நோக்கினுள். தன்னுடைய ஆசைப்ரவாகம் தன்னை ஒரு நரகக் குட்டைக்கு அடித்துக் கொண்டு போய் தள்ளியதை எண்ண அவளால் தாங்க முடியவில்லை. தன் கணவன் தன்னைப்பற்றி எண்ணியிருக்கும் அழு

மான எண்ணம் பளிச்சென்று தெரிந்துவிட்டதால் ஆகாயமும் பூமியும் சுற்றுவதுபோல் தோன்றியது.

56

பின்னும் சில வாரங்கள் கடந்தன. அன்று டாக்டர், ரகுவுக்குச் சிகிச்சை செய்யும்போது அவனுடைய கண்கள் மறுபடியும் பார்வையைப்பெறும் என்கிற சிறிது நம்பிக்கையை உண்டாக்கியதும் அவர் முகம் மலர்ந்தது. அருகிலிருந்த மீனாக்ஷி இதைக் கண்டு "டாக்டர்! பார்வை வந்துவிட்டதா?" என்று ஜாடையாகக் கேட்டாள். வரலாம் என்கிற நம்பிக்கை இருப்பதை ஜாடையினால் கூறினார்.

கண்ணைக் கட்டியிருக்கும் ரகுவோ "டாக்டர்! எனக்கு கண் வருமா வராதா! அதையாவது சொல்லிவிடுங்களேன். இந்த பரந்த உலகத்தை நான் இன்னும் எத்தனை காலம் பார்க்காத கபோதியாயிருப்பேன்! ஐயோ! என் கைகளும் புஜங்களும் யுத்தம் செய்யத் துடிதுடிக்கின்றதே! என் கண்ணால் நாம் ஜெயம் பெற்று வெற்றிக் கொடி தாங்கி வருவதைக் காண்பேனா! யுத்தம் ஒருமாதிரி முடிந்துவிடக்கூடிய நிலைமைக்கு வந்திருப்பதை பத்திரிகைச் செய்தியாலறிகிறேன். என் கண்ணால் காண்பேனா!" என்று தவித்தான்.

டாக்:—ரகு! பகவான் கிருபையினால் இன்னும் இரண்டு வாரங்களில் உமக்குக் கண் பார்வை சரியாக வரலாமென்று தோன்றுகிறது. அதுவரையில் பொறுத்திரும். வெற்றி மாலையை நீர் விரைவில் சூடுவீர். ஆனால் கண்ணால் ஜலம் விட்டுக் கலங்கமட்டும் கூடாது. நீர் எதையோ எண்ணி அடிக்கடி கண் கலங்குகிறீர். அதனால்தான் இப்படி நாள்பட்டு இழுக்கிறது...நர்ஸ்... இவரை எந்த விஷயமாயும் துக்கடபடாமல் சந்தோஷமாயிருக்கும்படி நீ பார்த்துக்கொள்ளு" என்று கூறி ரகுவைத் தட்டிக் கொடுத்துச் சென்றார்.

ரகுவுக்கு இரண்டு வாரங்களில் பார்வை வந்துவிடும் என்கிற வார்த்தையைக் கேட்டதும் அப்படியே சொர்க்கத்திற்குத் தூக்கிக்கொண்டு போவதுபோன்ற சந்தோஷம் உண்டாகி "நர்ஸ்... நர்ஸ்!"... இன்னும் இரண்டே வாரங்கள்தான்—பதினைந்தே நாட்கள்தான்—பிறகு என்னைச் சுற்றியுள்ள அபூர்வ அழகை ஆனந்தமாகக் காண்பேன்....என்னைப்போலவே வைராக்யப் பதுமையாயுள்ள உன்னை சந்தோஷமாகப் பார்ப்பேன்...இயற்கை அன்னையின் அத்புத ச்ருஷ்டிகளைப் பார்ப்பேன். என் தாய்நாட்டின் படத்தையாவது முதலில் கண்டு பேரின்பமடைவேன். என் மாமன் மாமிகளின் படங்களை முதலில் கண்ணில் ஒற்றிக்கொண்டு சேவிப்பேன். என் உயிர்ச் சினேகிதர்களின் படங்களைப்பார்ப்பேன். பகவானின் படங்களை தரிசிப்பேன். நர்ஸ்... இன்னும் 15 நாட்கள் தான்...உன் முகத்தைப் பார்க்க 15 நாட்கள்தான்...புண்பட்ட இதயத்துடன் த்யாகப்பிழம்பாயுள்ள உன்னை என் மாதாவாக எண்ணி தரிசிப்பேன்...ஏதோ உளறுகிறேனே, கீழ்த்தரமான ஆசையால் உளறுகிறேனே என்று எண்ணாதே. உன்னை என் தாயாக எண்ணித் தாயன்புடன் நோக்குவேன்."

என்று ஆவேசம் வந்தவனைப்போல் இவன் பேசுகையில் மீனாக்ஷியின் கண்ணீர் பலபலவென்று ஒன்றன்பின் ஒன்றாய் ரகுவின் கைகளில் சுடச் சுடவீழ்ந்து சரணமடைந்து உடைந்தன. இதை

இருந்த ரகு... "நர்ஸ்!... நர்ஸ்!......
இதென்ன!... கண்ணீர்போல் உதிர்கிறதே......ஏன்......எதற்காக.....
சொல்லு... சொல்லு... நான் ஏதாவது தப்பிதமாகக் கூறிவிட்டேனு! அப்படி அல்பத்தனமாக நான் பேசவில்லை என்பதை சத்தியமாகச் சொல்லுகிறேன். உன் கையிலேயே அடித்து ப்ரமாணம் செய்கிறேன். உன்னை உயர்ந்த தேவமாதாகவும் என் தாயாகவும் எண்ணுகிறேன். பெண்ணினத்திற்குப் பெருமை அளிக்கக்கூடிய முறையில் வாழ்பவர்களை நான் தெய்வமாகவே எண்ணி வணங்குவேன்! நர்ஸ்... உன்னுடைய பரிசுத்தமான ஸேவையின் மூலம் நீ உலகிலேயே ஓர் தனிப்பீடத்தில் ஆரோகணிப்பாய். வைராக்யத்தில் பண்பட்ட மனத்தை அல்ப ஆசையில் மாற்ருதே...ஒவ்வொரு வீரனையும் நீ உன் தாய் உள்ளத்துடன் நேசிக்கவேண்டும். உன் குழந்தைகளாக பாவிக்க வேண்டும். சிற்றின்பப் பேயிக்கு இடங்கராதே...

மணிமேகலை, சபரி, மீரா, கண்ணகி முதலிய உதாரணப் பெண்மணிகளின் அடிச்சுவட்டைப் பின் பற்றி நட... நர்ஸ்... என் பதிலே பேசவில்லை!" என்று கொந்தளிக்கும் ஆர்வத்துடன் கேட்டான்.

"இன்னும் 15 நாட்கள் தானே நமக்கு இந்த பாக்யம் கிடைக்கும். அதன் பிறகு கண் கட்டை அவிழ்த்துவிட்டால்......ஐயோ...... நினைக்கும்போதே பயங்கரமாகவிருக்கிறதே! பிறகு இந்தப்பாழும் ஜென்மத்திற்கு எப்படி முடிவு... என்கிற ஒரே ஏக்கத்தில் 15 நாட்கள் 15 யுகமாகக் கழியக்கூடாதா!" என்று மீனட்சி தபம் செய்கிருள். "15 நாட்கள் 15 விநுடியாகப்போய் விடக்கூடாதா! யுகம்போல் வளருகிறதே!" என்று ரகுவின் ஏக்கம். துடிதுடிப்பு...ப்ரார்த்தனை.

தேதியை எத்தனை தரம் எண்ணினலும் அது 24 மணி நேரத்தைச் சுற்றிக்கொண்டுதானே ஒரு நாளைக் கழிக்கவேண்டும்?...டாக்டர் 15 நாள் என்று சொல்லியதைக்கேட்ட பிறகு ரகுவின் துடிப்பு அதிகமாகியது. "நர்ஸ்....இன்னும் எத்தனை நாள் இருக்கிறது?" என்று தொணப்பிவிட்டான்...

பகவான் க்ருபையில் 15 நாட்கள் என்று கூறிய தவணை மாறி 10 நாட்களுக்குள்ளேயே கட்டை அவிழ்க்கலாம் என்று டாக்டருக்கு நம்பிக்கை உண்டாகியது. "சார்! 15 நாட்கள்கூட வேண்டாம்... நாளையே கட்டை அவிழ்த்து விடலாம்" என்று கூறியதும் ரகு சந்தோஷத்தால் துள்ளினன். "இன்னும் 24 மணி நேரந்தானு...டாக்டர்! டாக்டர்! நீங்கள்தான் தெய்வம்... நீங்கள்தான் சத்தியமாக தெய்வம். என் கட்டை அவிழ்த்த உடனே முதலில் உங்களைதரிசிப்பேன். ஸ்ரீகிருஷ்ணனின் படம் என் கைப்பெட்டியிலிருக்கிறது. அதை மேஜைமீது எடுத்து வையுங்கள். கூடவே அதை தரிசிப்பேன். உலகின் அழகைப் பார்ப்பேன்...அடாடா...இந்த மாதக் கணக்காகக் கண்ணில்லாதிருந்த என் பாடே இப்படி இருக்கிறதே. கடவுள் கபோதிகளாகவே சிலரைப் பிறப்பித்துவிடுகிருர். சிலரை பிறகு கபோதிகளாகச் சோதனை செய்கிருர். அவர்கள் நிலை எப்படியிருக்கும?...சேச்சே!...உலகத்தில் கண்ணில்லாமல்கூட மனிதர்கள் வாழலாமா?" என்று அங்கலாய்த்தான்,

மறுதினம் காலையை ரகு எத்தனை ஆவலுடன் எதிர்பார்த்தானே, அத்தனைக் கத்தனை மீனுக்ஷி மறுதினத்தை எண்ணிக் கண்ணீர்

வடித்தாள்.

24 மணி நேரம் செல்வது ஒரு யுகமாயிருந்தது; எனினும் ஒரு வழியாக சென்றுவிட்டது. "சார்! இதோ கட்டை அவிழ்க்கப்போகிறேன். இதோ உமது ஸ்ரீக்ருஷ்ணனின் படத்தையே கையில் வைத்திரும். உடனே அதைப்பாரும். தேர்தட்டிலிருந்து பாரத யுத்தத்தில் ஜெயத்தைக் கொடுத்த பரந்தாமனையே முதலில் தரிசித்து நமக்கும் ஜெயத்தைக் கொடுக்கும்படி ப்ரார்த்தனை செய்யும்" என்று கூறி படத்தைக் கொடுத்துப் பின் கண்களின் கட்டை அவிழ்த்தார்...

123908

"ஆஹா! என்னே ஆனந்தம்! என்னே புத்துணர்ச்சி. என்னே புனர் ஜென்மம்! ஆனந்தக் கூத்தாடியவாறு ஸ்ரீக்ருஷ்ணனின் படத்தை முதல் முதல் பார்த்தான். களிவெறி கொண்டு படத்தைச் சேவித்தான். முத்தமிட்டான். டாக்டரைக் கட்டிக் கொண்டான். தனது துப்பாக்கியை முத்தமிட்டான். தன் தாய்நாட்டின் படத்தை எடுத்துப் பார்த்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டான்.

பரந்த வானவெளியையும் இயற்கையின் தேஜஸையும் பார்த்துப் பூரித்தான்... உடனே... அவன் கண்கள் நாற்புறமும் சுழன்றன...."டாக்டர்! எங்கே அந்த நர்ஸ்... நர்ஸ்.... நர்ஸ்?"... என்று கூப்பிட்டான்.

'அவளுக்கு இந்த ஆஸ்பத்திரியிலிருக்கப் பிடிக்கவில்லையாம். இன்று காலையில் கிளம்பிய கப்பலில் வேறு ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டாள். இந்த கடிதத்தை உம்மிடம் கொடுக்கச் சொன்னாள்.'

என்று கூறி மற்றொரு நர்ஸ்கடிதத்தை ரகுவிடம் கொடுத்தாள். சில விநாடிகள் ஸ்தம்பித்த ரகு கடிதத்தைப் பார்த்தான்...."என்ன ... அந்தப் பாவியின்கையெழுத்துபோல்.....போல் என்ன ... அவள் எழுத்தே தான்......

இதென்ன கிணறு வெட்டப் பூதம் கிளம்புவதுபோல்...என்று தனக்குள் நிலை தத்தளித்தான்.

இதற்குள் ரகுவுக்குக் கண் வந்துவிட்டதாமே! என்கிற சந்தோஷம் விசாரிக்க, நூற்றுக்கணக்கானவர்கள் வந்துவிட்டதால் கடிதத்தைப் படிக்க தனிமையே உண்டாகவில்லை. சற்று சந்தோஷ அலை ஓய்ந்ததும் தனியிடத்தில் கடிதத்தை உடைத்தான். சந்தேகமில்லாது அவள் எழுத்துதான் என்பதை அறிந்ததும் அவனை ஏதோ சித்திரவதை செய்தது.

"நமஸ்காரம்......இப் பாவியின் பிறவி முற்றும் விழலுக் கிறைத்த நீர்போலாகிவிட்டதெனினும் இந்த சில மாதங்களாவது தங்களுக்கு நர்ஸாகப் பணிவிடை செய்யும் பாக்யம் கிடைத்ததை நான் பிறவியின் சார்த்தகமாக எண்ணுகிறேன். கொலைப்பாதகிக்கு அதிலும் தன் கருப்பத்திலுள்ள கருவைக் கொலை செய்த சண்டாளிக்கு மன்னிப்பு என்பது எந்த உலகத்திலும் இல்லை. இன்று தங்கள் கண் கட்டை அவிழ்த்துவிட்டபிறகு இப்பாவியின் முகத்தில் விழிக்க நேரும்படி நான் நடக்க ப்ரியப்படவில்லை. அன்று தாங்கள் நேரில் சொல்லிபடி இந்தச் சண்டாளியின் மறைவுநாளை இன்றைய தேதியில் வைத்துக் கொண்டாடுங்கள். இக் கடிதம் தங்கள் கைக்கு வருவதற்குள் நான் கப்பலிலிருந்து கடலில் குதித்து இறப்பேன். தங்கள் பாதங்களுக்கு ஆயிரங்கோடி வந்தனம். இனியாவது பவித்திரமான ஒரு பெண்ணை மணந்து சுகவாழ்க்கை வாழுங்கள்.

அடிமை."

இதைப் படித்ததும் அவனுடைய வியப்பு, திகைப்பு, ஏமாற்றம், துக்கம் எல்லாம் ஒருங்கே கப்பிக் கொண்டு சில நிமிஷம் அவனை வதைத்தன"...என்ன!...அந்த பாதகியிடமா நான் இத்தனை நாள் வேலை வாங்கிக்கொண்டேன்!"...என்று நினைக்க தலை சுழன்றது... தெளிந்த கண்கள் மறுபடியும் இருள்வதுபோல் தோன்றியது. அப்படியே படுத்துவிட்டான்...

*   *   *   *

ஜெயம் கிடைத்துவிட்டது. பர்மா முனையில் மீண்டும் யுத்தம்தொடங்கி ரகுநாதனின் தலைமையில் இழந்த பல ஊர்களைத் திருப்பிப் பிடித்தாகிவிட்டது ஜர்மனியும் ஜப்பானும்

ஒழிந்துவிட்டன. சரணாகதி...எங்கும் இதே வெற்றி விழாக்கள் சொண்டாடி மக்கள் களிக்கும் நாள்வந்தது.

மேஜர் ஜெனரல் ரகுநாத் தன் தாய்நாட்டின் புண்ணிய பூமியை மிதிக்கவும், மாமி மாமனைப் பார்க்கவும் தடுக்கமுடியாது ஆசையுடன் துடித்து தாய்நாடு வந்திறங்கினான். "என் தாய்நாடு. என் பாரத நாடு. என் அன்னை மடியில் ஆனந்தமாக விளையாட வந்துவிட்டேன்" என்கிற பெருமிதத்துடன் கப்பலை விட்டு இறங்கியவுடன் தாய்நாட்டை ஆனந்தப் பூரிப்புடன் சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்து முத்தமிட்டு ஒரு பிடி மண்ணை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கினான்.

மாமன், மாமி, கமலா, கேசவன் முதலியவர்களை வீட்டில் பார்த்தவுடனே ரகுவுக்கிருந்த சந்தோஷத்தில் மாமன், மாமியின் காலில் விழுந்து வணங்கிப் பின் மாமனை, அப்படியே கட்டித்தூக்கிக்கொண்டு கூத்தாடினான். எல்லோரும இவனுடைய அன்பைக் கண்டு வியந்தார்கள். கேசவன் ரகுவை மூச்சுத் திணற வடித்துவிட்டான். தான கொண்டு வந்திருந்த பணப்பையை கமலாவின் கையில் வைத்து "இந்தா! உன் அண்ணனின் பரிசு" என்று கூறி அவளைத் தட்டிக்கொடுத்தான.

கமலாவும் ஆனந்தக் கண்ணீர் முட்ட "அண்ணா! தங்கைக்கு மட்டுந்தான் பரிசா? அண்ணனுக்குப் பரிசு கொடுக்க எனக்குத்தெரியாதா? நீ எப்போது வரப்போகிறாய்? என்று இந்த ஆனந்தக்காக்ஷியைக் கண்டு களிக்கப்போகிறோம்?" என்று நானும் உனக்கோர் பரிசை சித்தமாகவே வைத்திருக்கிறேன். இந்தா! பிடி... இந்த பரிசை நீ அங்கீகரிக்கும் மூலந்தான் உன் முன்னறி தெய்வங்களை நீ த்ருப்திசெய்யமுடியும்" என்று கூறித் தன் தங்கையின் கையைப்பிடித்து ரகுவின் கையில் பதித்தாள். அவன் இதயத்தில் ஒரு க்ஷணத்திற்குள் பெரும் புயலடித்துக் கலக்கியது. ஆனால் ஸ்வர்ணப் பதுமைபோல்நிற்கும் மங்களவல்லியின் கம்பீரத்தோற்றமும், கனிவு, அன்பு, பொறுமை, கற்பின் மாண்பு சதியின் உயர்ந்த லக்ஷ்யம் ஆகிய பல உணர்ச்சிகள் அந்த அழகிய தாமரைக்கண்களில் ஒரே காலத்தில் ஜ்வலித்ததைக் கண்டதும் உலகின்ப ஆசையின் அலை லேசாக மோதி அவனது வைராக்யத்தைச் சிறிது தளர்த்தியது. உடனே மனப்பூர்வமான ப்ரீதியுடன் மங்களவல்லியின் கைகளைப் பிடித்துக்கொண்டு மாமன் மாமியின் முன்பு தாவி ஒரே சமயம் அவ்விருவரையும் இருவரும் நமஸ்கரித்தார்கள். கிழவர்களின் குழிந்துபோன கண்களில் ப்ரகாசம் ஜாஜ்வல்யமாய்த்தோன்றி ஆனந்த மலர்களை உகுத்தது.

பகவானும் பரிபூர்ண மனத்துடன் ஆசீர்வதிப்பதை அறிவிப்பதேபோல் தொலை தூரத்திலிருந்த கோயில் மணி டாங்...டாங்...டாங்...டாங்...என்று வெகு இனிமையாயும் மங்களகரமாயும் ஒலித்தது. அதைக் கேட்ட எல்லோருடைய இதய தடாகங்களிலும் ஆனந்த மலர் பூத்துக் குலுங்கியது. இதைவிட வேறு நித்ய கல்யாண வைபவ சுகம் என்ன இருக்கிறது?

சென்ற இதழில் "மேஜர் ஜெனரல் ரகுநாத்" என்பதற்குப் பதிலாகப் பலவிடங்களில் "மேஜர் ரகுநாத்" என்று மட்டும் தவறுதலாக அச்சாகியிருக்கிறது. எல்லா இடங்களிலும் "மேஜர் ஜெனரல்" என்று படிக்கவும்.